ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூதஹு மார்கழி௴ பகுதி கஉ.

Vol 7. December & January 1930-31. No. 12.

ப்ரபந்த பரித்ராணம்.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரன், நித்யாநுபவஞ் செய்கிற நித்ய ஸூரிகளைப்போல ஸம்ஸாரிகளும் இன்பம் அநுபவித்தற்கு யோக்யதையுடையவர்களாயிருந்தும் அதனை இழந்திருப்பதைக்கண்டு இரக்கமுற்று வேதாதி சாஸ்திரங்களை வெளியிட்டான். வேதாதி சாஸ்திரங்களோ மிகவும் விரிவாகவும் அரிதிற் பொருளுணரத் தக்கனவாயுமிருந்தன. சிறந்த அறிவுடைய பெரியார்களன்றி ஏனையோர்கட்கு இவற்றின்பொருளுணர்தல் அரிதினுமரிதாம். இதனைத் திருவுள்ளம்பற்றிய எம்பெருமான் ஸகல சாஸ்திரங்களின் தாத்பர்யங்களையும் சுலபமாகவறியும்படி * ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களின் உண்மைகளை நன்ருகத்தெரிவிக்கின்ற மூன்று ரஹஸ்யங்களைத்தானே ஆசார்யனுகவிருந்து வெளியிட்டான்.

இந்த மூன்று ரஹஸ்யங்களுள் திருமந்த்ரத்தைப் பதரிகாச்ரமத்தில் நரனென்ற சிஷ்யனுக்கும், த்வயத்தை விஷ்ணு லோகத்தில் பெரியபிராட்டியாருக்கும், சரமச்லோகத்தைத் திருத்தேர்த்தட்டில் அர்ஜுனனுக்கும் உபதேசித்தருளினன். இந்த ஸ்வரூபோபாய

* ஸ்வரூபமாவது—பகவச்சேஷத்வம். (எம்பெருமானுக்கு அடிமையாயிருத்தல்) உபாயமாவது--ஈசுவரன். புருஷார்த்தமாவது-எம்பெருமானுக்குகப்பாகப்பண்ணும் கைங்கர்யம்.

புருஷார்த்தங்களைச் செவ்வனே தெரிவிக்கிற மூன்று ரஹஸ்யங்களும் சொற்சுருக்கமுடையனவாயிருந்தாலும் அர்த்தம் உபதேசத்தால் அறியத்தக்கனவாயிருக்கும். இவற்றை யறிந்தே மாந்தர்கள் உய்யவேண்டும். பூர்வாசார்யர்கள இவ்வர்த்தங்களைப பொன்னே போற்போற்றி வந்தனர். இவ்வர்த்த விசேஷங்களைத் தெளிவாய் எல்லோரும் அறியும்பொருட்டுப் பிள்ளைலோகாசார்யர் தம்முடைய பரமகிருபையாலே அஷ்டாதசரஹஸ்யம் (பதினெண் ரஹஸ்யம்) என்னும் க்ரந்த வாயிலாக வெளியிட்டார். இந்தப் பதினெண் ரஹஸ்யங்களுள் யாத்ருச்சிகப்படி "பரந்தபடி" "ஸ்ரீய:பதிப்படி" "முமுக்ஷுப்படி" "தனிப்ரணவம்" "தனித்வயம்" "தனி சரமம்" என்ற ஏழு க்ரந்தங்கள் மாத்திரமே § ரஹஸ்யத்ரய விவரணமாகத் தோற்றும். ஆராய்ந்து பார்த்தால் ஏனைய பதினொரு ரஹஸ்யங்களும் ரஹஸ்யத்ரய விளக்கமாகவேயிருக்கும் என்பது தெளிவாய்ப் புலப்படும். இந்த ‡ ப்ரபந்ந பரித்ராணமும் திருமந்திரத்திலுள்ள அகார நமப்பதங்களின் விவரங்களை வெளியிடுகிறது. லோகதேசிகனும் முமுக்ஷுப்படியில் அகாரார்த்த மருளிச்செய்கிறவிடத்தில் "ஈசுவரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்ல ரென்னுமிடம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்" என்று அருளிச்செய்ததும் இதனை வலியுறுத்தும்.

மேலும் இந்த ப்ரபந்ந பரித்ராணத்தில் ஸர்வேசுவரனுக்கு ஸர்வரக்ஷகத்வம எவ்வாறு ஸித்திக்கும்? என்று பூர்வபக்ஷஞ் செய்துகொண்டு அதற்குச சமாதானம் பல இதிஹாஸ வாயிலாக அருளிச்செய்கின்றாராதலால அதனை இங்கு விளக்குவது இன்றியமையாததென்று கருதி அவ்வாறலாறுரைக்கப்படுகின்றன.

---

§ ரஹஸ்யத்ரயம்--திருமந்த்ரம், த்வயம், சரமசுலோகம்.

‡ ப்ரபந்நபரித்ராணம்-ப்ரபந்நர்களுடைய ரக்ஷணம். ப்ரபந்நர்-ப்ரபத்தி நிஷ்டையுடையவர்கள். ப்ரபத்தியாவது-பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ப்ரபத்தியாம் [சேதனனுடைய ரக்ஷணஹேதுவான ஈசுவரனுடைய முயற்சியைத்தடுக்கும் சேதனனுடைய ஸ்வரக்ஷண ஹேதுவான முயற்சியாதோ அம்முயற்சியை விடுதலே ப்ரபத்தியாம்] இங்குப பரித்ராணமென்பது ரக்ஷண விஷயத்தைத் தெரிவிக்கின்ற நூலிற்கானது ஆகுபெயர்.

(க) முமுக்ஷுவாய் மோக்ஷார்த்தமாக ஸர்வேசுவரனைப்பற்றி யிருக்குமவனுக்கு அநந்யகதித்வமும் ஆகிஞ்சன்யமும் வேண்டும்.

(உ) அநந்யகதித்வமாவது.—"களைவாய் துன்பங் களையாதொழி வாய், களைகண்மற்றிலேன்" என்றிருக்கை.

(க) இங்கு முமுக்ஷு என்ற சொல் ஸர்வேசுவரனை யடைவதே முக்ய ப்ரயோஜனமாகக்கொண்டு ஸம்ஸாரபந்தத்தை யறுத்துக்கொள்ள விருப்பமுள்ளவனைக் குறிப்பிடும். மோக்ஷத்தில் இச்சையும், ஸம்ஸாரபந்த நிவ்ருத்தியின்பொருட்டு ஸர்வேசுவரனை உபாஸித்தலும் கைவல்யனுக்கும் உரியனவாயினும் ஆகிஞ்சன்யத்வமும் அநந்யகதித்வமும் அவனுக்கு வேண்டாவாதலால் முமுக்ஷு என்பது பகவத் ப்ராப்தி காமனையே யுணர்த்தும். இந்த அதிகாரிக்கு அநந்யகதித்வம் ஆகிஞ்சன்யம் என்ற இவ்விரண்டும் அவசியமிருத்தல் வேண்டும். இவ்விரண்டும் இன்னின்னதென விளக்குகிறார்.—

(உ) "களைவாய்துன்பங்களையாதொழிவாய்" என்பது ஆழ்வாரருளிச்செய்தது. இதன் பொருளாவது.— துன்பத்தை யகற்றினுமகற்று; அகற்றுதொழியினுமொழிவாய்; யான் உன்னையன்றி வேறு ரக்ஷகரையுடையேனல்லேன் என்பதாம். கண்ணபிரான் அர்ஜுனனை வியாஜமாக்கி யருளிச்செய்த சரமச்லோகத்தில் "எல்லாத் தர்மங்களையும் விட்டு என்னையே உபாயமாகப்பற்றுவாய்; நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்" என்று அருளிச்செய்தான். இதில் எல்லாத்தர்மங்களையும் விட்டு எம்பெருமானையே உபாயமாகப்பற்றியிருப்பது ப்ரபந்நாதிகாரியின்காரியமென்பதும், அவ்வதிகாரியிடத்திலுள்ள ப்ரதிபந்தங்களை யகற்றுவது எம்பெருமான் காரியமென்பதும் வெளியாயின. இங்கு ஆழ்வார் ஸர்வேசுவரனை நோக்கி, 'நீ யருளிச்செய்த கட்டளையின்படி அடியேன் களைகண் மற்றிலேனாகவிருக்கிறேன்; என்னிடத்திலுள்ள ப்ரதிபந்தங்களைப்போக்குவது உன்னைச் சார்ந்ததாகுமன்றே! அதனைச்செய்யினும் செய்வாய்; தவறினுந் தவிர்வாய் என்றார். இதனால் களைகண் மற்றிலேன் என்றிருப்பதே அநந்யகதித்வமென்பது போதரும்.

(ரு) ப்ராதாக்கள, புத்திரர்கள், மாதாபிதாக்கள், ப்ரஹ்ம ருத்திராதிகள் தொடக்கமானவர்கள் ரக்ஷகராகக் குறையென்னேன்னில்;

(சு) ப்ராத்தாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் வாலி பக்கலிலும் ராவணன் பக்கலிலுங் காணலாம்.

(ரு) மாதாபிதாக்கள் முதலானவர்கள் புத்திராதியர்களை ரக்ஷிக்கின்றார்களென்பதைப் பிரத்யக்ஷப் பிரமாணத்தாலும், பிர்ம்ம ருத்திராதிகள் ரக்ஷகராவாரென்பதை ஆகமப் பிரமாணத்தாலு மறிந்திருக்க ஸர்வேசுவரனிடத்தில் மாத்திரமே ரக்ஷகத்வதர்ம முள்ளதென்பது பொருந்துமோ வென்பதற்குச் சமாதானமருளிச் செய்கிறார்.—

(சு) தமையன்மார்கள் பின் பிறந்த தம்பியர்கட்கு ரக்ஷகராக மாட்டார்களென்பதை வாலியின் வரலாற்றாலும் ராவணனுடைய வரலாற்றாலு மறியலாம். வாலியின் வரலாறு வருமாறு.—

வாலியானவன் மாயாவி யென்ற அசுரனோடு போர் செய்து கொண்டிருக்குங்காலத்தில் மாயாவி போருக்காற்றாது ஒரு பிலத்திற் புகுந்து ஒடி யொளிக்கத் தொடங்கினன். அப்பொழுது வாலி அந்தப் பிலத்திற் புகுந்து மாயாவியோடு நெடுநாள் யுத்தஞ்செய்து கொண்டிருந்தான். இதனைக்கண்ட சுக்கிரீவன் 'இன்னும் எனது தமையன் இங்கு வந்து சேரவில்லையே; அவன் கெதி யாதாயிற்றோ' என்று மிக்க கவலையுற்று அந்தப பிலத்தில் நுழையத் தொடங்கினன். அதுசமயம் அறிவிற் சிறந்த சிலர், வாலி மாயாவியினால் உயிர் துறந்திருப்பானென் றுறுதிகொண்டு 'இனி நீ எங்கட்கு அரசனாகவிருக்கக்கடவாய்; இந்தப் பிலத்தில் நுழையக்கடவை யல்லை' என்று தடுத்தார்கள். சுக்ரீவன் அவர்களை நோக்கி,

"வானமாளவென்றம்முனைவைத்தவன்
றானுமாளக்கிளையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள்கிலேன்
ஊனமானவுரைபகர்ந்திரென"

என் தமையனை ஸ்வர்க்கம் புகச்செய்தவனையும், அவனுடைய உறவினர்களையும் கொன்று யானும் உயிர் துறக்கக் கடவேன், எனக்கு

மூத்தோன் உயிர்விட்டபின் நான் பிழைத்திருந்து அரசாளமாட்டேன்; நீங்கள் எனக்குத் தகாதவார்த்தைகளைச் சொன்னீர்களென்றான். பின்னர் படைவீரரும் அறிவிற்சிறந்த மந்திரிமார்களும் உறவினர்களும் வந்து பரிவுடனின்று, 'நமது கிஷ்கிந்தை அராஜகமாக விருக்கலாகாது; நீயே அரசுரிமையை மேற்கொள்ளவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல் சுக்ரீவன் மனவருத்தத்துடன் அரசுரிமையை ஒப்புக்கொண்டான்.

இஃதிங்ஙனமிருக்க; மாயாவியோடு போர் செய்யச்சென்ற வாலியானவன் அவனைக்கொன்றுவிட்டு வந்து சேர்ந்தான். அப்பொழுது சுக்ரீவன் வாலியின் பாதங்களில் விழுந்து வணங்கிநின்று, 'அண்ணா! நீர் மாயாவியோடு யுத்தம் செய்யச்சென்ற காலத்தில் நீர் நுழைந்து சென்ற பிலத்தில் காத்துக்கொண்டிருந்து நெடுநாளாக உமது வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அதன்மேல் அந்தப் பிலத்தில் நுழைவதற்கு யத்தனித்தேன். அது சமயஞ் சில பெரியோர்கள் என் கையைப்பிடித்து வற்புறுத்தி இந்த அரசுரிமையைத் தந்தார்கள்; இனி, இதனை நீரே ஒப்புக்கொள்வீர்' என்று சிறிதும் வஞ்சனையில்லாமற்கூறினான். வாலி இவ்வுரைகளைச் செவியேற்றுக்கொள்ளாமல் சுக்ரீவனைக் கொல்வதற்கு முயன்றான். சுக்ரீவன் மறுபடியும் 'அண்ணா! அபயம்; நான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று முறையிட்டான். வாலி, அதனையும் பொருட்படுத்தாமல் அவனோடு போர்செய்து இரக்கம் சிறிதுமின்றி இம்சை செய்தான். சுக்ரீவன், 'அண்ணா! உமக்குத் தோற்றேன்; என்னை நலியாது விடுவீர்' என்று கதறினான். அதற்கும் வாலி இரக்கங்கொள்ளாதிருக்கக் கண்டு, சுக்ரீவன் எழுகடற்கப்பாலுள்ள பூமியையும் தாண்டி அண்டச்சுவரை யடைந்தான். வாலியும் அதிவேகமாய்ச் சென்று அவனைப் பிடித்து 'உன்னைச சின்னபின்னஞ்செய்து கொலகிறேன்' என்று உயர எழும்பிச் செலலலுற்றான். சுக்ரீவன் அதிருஷ்டவசத்தால் வாலி சிறிது சோர்வுற்ற சமயத்தில் வாலி சாபத்தால் கிட்டுதற்கரிய மதங்கமஹருஷியிருக்கும் ருஷ்யமூக பர்வதத்தையடைந்து இராமபிரானைச் சரண்புகுந்து உயிர்பெற்றிருந்தான்.

இராவணன் வரலாறு.—

அநுமான் இலங்கையை எரிக்கிரையாக்கிச் சென்றபின் இராவணன் மிகுந்த வருத்தமுற்று மந்திராலோசனை ஸபை கூட்டினன். அப்பொழுது இராவணன் மந்திரிமார்களை நோக்கி,

"சுட்டதுகுரங்கெரிசூறையாடிடக்
கெட்டதுகொடிநகர்கிளையுநண்பரும்
பட்டனர்பரிபவம்பரந்ததெங்கணும்
இட்டதிவ்வரியணையிருந்ததென்னுடல்"

ஒரு குருங்கானது அக்னி கொள்ளைகொள்ளும்படி கொடியுடன் விளங்குகிற நமது இலங்கையை எரித்தது. அதனால் உறவினரும் நண்பரும் இறந்து பட்டனர். இந்தப் பரிபவமொழியானது எவ்விடத்திலும் சென்று பரவியது. இதனைக்கண்டும் உயிர் துறக்காமல் ஜீவச்சவமாய் இந்தச் சிம்மாசனத்திலிருக்கின்றேன் என்றுரைத்தான். அதுபொழுது கும்பகர்ணன் முதலான மந்திரிமார்கள் இராவணனுக்குத் தேறுதலாகத் தத்தம் மனநிலையுரைக்கின்றவிடத்தில ஸ்ரீவிபீஷணாழ்வான் இராவணனை நோக்கி,

"கோநகர்முழுவதுநினதுகொற்றமும்
சானகியெனும்பெயருலகின்றம்மனை
ஆனவள்கற்பினால்வெந்ததல்லதோர்
வானரஞ்சுட்டதென்றுணர்தல்மாட்சியோ"

நமது இராஜதானியனைத்தையும் உமது வெற்றியையுடைய வீரத்தையும் ஜானகியென்று சொல்லப்படுகிற லோகமாதாவாகிய ஒருத்தியின் கற்பினால் வெந்தொழிந்தனவேயன்றி இவற்றை ஒரு குரங்கு சுட்டதென்று கருதுவது மாண்பாகுமோ? 'இலங்கை வேந்தனது சிறந்த தவப்பேற்றாலெய்திய பதவியானது ஒரு மானிடனாதினால் அழிந்துவிடும் என்று உலகத்திற் கூறுகின்ற வாய்மொழியை மறந்தீரோ? நீர் திக்விஜயஞ்செய்துவருகிற காலத்தில் வேதவதியென்ற கற்புடையாளைக் காமக்களிப்பால் உரைக்கத்தகாதன கூறித் தீண்டியபொழுது அவள் "ஏடாவுனக்கு மிலங்கைக்கு மூன்கிளைக்கும், கேடாகத்தோன்றுவேன்,....." என்று சபித்தாளன்றோ! அவளோ

இப்பொழுது ஜனககுல சுந்தரியாய்த் தோன்றினளென் றுணர்வீராக. பண்டு கைலயங்கிரியைப் பெயர்த்தெடுத்த காலத்தில் 'நந்திதேவன் உம்மை நோக்கி, குரங்குகளால் உன் பெருநகர் பாழாகும்' என்று சபித்தானன்றோ! மரங்களில் தத்தித்திரியும் புல்லிய குரங்குகள் அதிவீரர்களாயிருக்கும் நம்மை என்ன செய்யக்கூடுமென்று பொருட்படுத்தாதிருப்பதற்கும் வழியில்லை; வாலியிடத்தில் நம்பாவில்லாத அளவிலாற்றலை நேரே கண்டிருக்கிறோம்.

நீம்மோடு போர்செய்வதற்கு வந்திருக்கிற ரகுவீரனைச் சாமான்யமான ஒரு மானிடனென்று கருதலாகாது; அந்த ரகுவீரன் விசுவாமித்திரர்பாலும், அகஸ்தியமாமுனிவரிடத்திலும் ஈசன் தந்த படைக்கலங்களையும், தேவாசுர யுத்தத்தில் கருடன் மீதேறி வெற்றிகொண்டானது வில்லையும் பெற்றுள்ளான். அவற்றால் இமைப்பில் எவ்வுலகங்களையும் நாசமுறச்செய்ய விரும்புவானேல் அங்ஙனமே செய்வானென்பதற் கையமில்லை. ஹிரண்யனுடைய ஒப்புயர்வற்ற ஆட்சியும், தவப்பேறும், வலிமையும் யாதாயின? இவற்றையெல்லாம் நீர் அறியீரோ? இந்த இலங்கைசுவர்யத்தைப பெற்று சுகமாக வாழவேண்டுமென்று கருதுவீராகில் பிராட்டியாரை ராகவன்பாற் சேர்ப்பீராக; என்று நன்மை பயபபனவாயும், இனிமையாயுமுள்ள வுரைகளைக் கூறினன்.

இதனைக்கேட்ட இராவணன் கோபமுற்று ஸ்ரீவிபீஷணும் வானை நோக்கி, 'அடே குலத்துரோகி! முன்பு தூதுவந்த குரங்கைக் கொன்றிருப்பேனாகில் எனக்கித்தனை பழி வந்திருக்க மாட்டாது; அபபொழுது தூதனைக் கொல்லலாகாதென்று விலக்கினை; வீரனாகிய என்னிடத்தில் ஒரு மானிடசிறுவனைப் புகழ்ந்து கூறுகிறாய்; அம்மானிடனிடத்தில் அன்புற்றசிநேகையனுமிருக்கின்றாய்; அவனே தஞ்சமாகவும் கருதுகின்றாய்; அடே பயலே! நீ இராக்ஷஸஜாதியிற் பிறந்தவனாகவில்லை.

"பழியினையுணர்ந்தியான்படுக்கிலேனுனை
ஒழியிலைபுகலுதவொல்லைநீங்குதி
விழியெதிர்நிற்றியேல்விளிதியென்றனன்
...."

(ஞ) புத்திரர்கள் ரக்ஷகரல்லரேன்னுமிடம் ருத்திரன் பக்கலிலும் கம்சன் பக்கலிலும் காணலாம்.

உலகத்தில உடன் பிறந்தானொருவனைக் கொன்றானென்று பழி கூறுவாரென்று கருதி இப்பொழுது உன்னைக் கொல்லாது விட்டேன்; எல்லா முணர்ந்த எனக்கோ ஒழிவில்லாமல் இன்மொழி பகர்வது; இனி இவ்வெல்லையைவிட்டு விரைவில ஓடிப்போவாய்; என் விழி யெதிர் நிற்பையேல இறந்துபடுவாய் என்று இரக்கம் சிறிதுமின்றி இசைத்தான்.

இந்தக் கொடியமொழியைக்கேட்ட ஸ்ரீ விபிஷணாழ்வான், 'இனி நமக்கு இவன்பாலுறவில்லை' என்று மதித்து, எல்லா உறவினரிடத்திலுமுள்ள பற்றெல்லா மொழித்து இராமபிரானைச் சரண்புகுந்து வாழ்ந்திருந்தான்.

இந்த இரண்டு வரலாறுகளும் தமையன்மார் நம்பியருக்கு ரக்ஷகராகமாட்டார்களென்பது புலனாயிற்று.

(ஞ) புத்திரர்கள் ரக்ஷகராகார் என்பதற்கு ருத்திரனும் கம்சனும் சான்றுவார்கள்.

ருத்திரன் வரலாறு.— ருத்திரன் தன் பிதாவான பிர்ம்மாவின் தலையைச் சேதித்தான். பின்னர் இந்த வரலாற்றின் விவரமுரைக்கப்பெறும்.

கம்சன் வரலாறு — முன்பு மதுராபுரியை அரசுசெய்துகொண்டிருந்த யதுசிரேஷ்டராகிய வசுதேவா போஜகுலத்தலைவனான தேவகனுடைய புதல்வியாகிய தேவகிதேவியை மணஞ்செய்து கொண்டு தம்மில்லத்திற்குச் செல்லக்கருதி தேவகியுடன் மணக்கோலத்தோடு தேரில் ஆரோகணித்தார். அப்பொழுது உக்ரசேன மஹாராஜாவின் புதலவனாகிய கமசன் பொன்மயமான அநேக இரதங்கள் சூழச்செல்லும தன் தங்கையிடத்தில் அன்புவைக்க வேண்டுமென்ற நல்ல கருத்தினால் வசுதேவர் இரதத்திற்பிணைக்கப்பெற்ற குதிரைகளின் கடிவாளக்கயிற்றைப்பற்றிக்கொண்டு சாரதியஞ்செய்து சென்றான். உக்ரசேனர் தன் புத்திரியினிடத்தில்

அன்புற்று பொன்மாலை யணியப்பெற்ற யானை, குதிரை இரத முதலிய பல வரிசைகள் ஸ்திரீதனமாக அனுப்பினர்.

இங்ஙனம் விருதுகளோடு மங்களவாத்ய முழங்கக் கம்சன் தேர் செலுத்திக்கொண்டு செல்கிற காலத்தில 'புத்தியில்லாத கம்சனே! நீ சாரத்யஞ்செய்துவருகிற இரதத்திலிருக்கிற உன் தங்கையின் வயிற்றிற் பிறக்கப்போகிற எட்டாவது புதல்வன் உன்னைக் கொல்வான்; இதிற் சந்தேகமில்லை' என்று அச்சமுறும்படி அசரீரி வாக்கெழுந்தது. அதனைக்கேட்ட கெட்டவொழுக்கமும் கெட்ட சிந்தையுமுள்ளவனுகிய கம்சன் தன் உடைவாளையுருவி தேவகியை வெட்டுவதற்கு முயன்றான். அறிவிற் சிறந்த வசுதேவர் அவனை நோக்கி, "போஜகுலத்தில் நற்புகழ்படைத்தவனும், மஹாசூரனும் விளங்குகிற நீ மணக்கோலத்துடன் விளங்குகிற உனது தங்கையைக் கொல்ல முயல்வது தர்மமாகுமோ? உலகிற் பிறந்தனவெல்லாம் நிலைத்திருக்கமாட்டாவென்பதை நீ யறியாயோ? நிலையாமையின் உண்மையை யறிந்தவன் மோக்ஷத்தைத் தரத்தக்க நல்வழியிற் செல்வானே யல்லது பாபவினைகளை மனத்திலும் கருதமாட்டானன்றோ! பிரம்மாவானாலும் தீவினையைச் செய்வானேல் அதன் பலனை ஒரு சிறிதும் தவறாமல் அநுபவித்தே யொழியவேண்டும்" என்று பல நீதிகளை யெடுத்துரைத்தார். அப்பொழுதும் அவனுடைய மனமிரங்கவில்லை. இந்நிலைமையில் மேலும் வசுதேவர் அவனை நோக்கி, 'இவள் வயிற்றிற் பிறக்கிற எட்டாவது பிள்ளையினால் உனக்குமரணமுண்டாகுமென்று அசரீரிகூறியது; அதைக்குறித்து நீ பயப்படவேண்டா; இவளவயிற்றிற்பிறக்கிற ஒவ்வொரு குழந்தைகளையும் உன்னிடத்திற் கொடுத்துவிடுகிறேன்; நீ அந்தக் குழந்தைகளை உடனே கொலை செய்துவிடு; இப்பொழுது இவளைக் கொலை செய்யக்கருதாதே' என்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். அதற்குக் கம்சன் உடன்பட்டான்.

பின்னர் வசுதேவருக்குத் தேவகியின் வயிற்றிற் புத்திரோத்பத்தியானவுடன் வசுதேவர் அந்தக் குழந்தையைக் கையிலெடுத்து கம்சனிடத்திற் கொடுத்து நீ கருதியபடி செய்துகொள் என்றார். கம்சன் வசுதேவரது சத்ய சிந்தையையும் நல்லொழுக்கத்தையுங் கண்டு, 'நமக்கு எட்டாவது பிறக்கும் குழந்தையால் மரணமுண்டாகுமென்று அசரீரியுரைத்தது; இந்தச் சிசுவைக் கொல்வதால்

பிரயோஜனமொன்றுமில்லையே' என்று இரக்கங்கொண்டு அந்தக் குழந்தையை வசுதேவரிடத்திற் கொடுத்துவிட்டான். இவனுக்குக் கெட்டபுத்தியுண்டானபோது யாது சொல்வானோவென்றுமதித்து அவன் குழந்தையைக் கொடுத்ததற்காக வசுதேவர் மகிழ்ச்சிகொள்ளாமல் குழந்தையை யெடுத்துக்கொண்டு வந்தார். அதன்பிறகு வசுதேவருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. முன் பிறந்ததோடு ஆறு குழந்தைகளும் ஒரு சாபத்தாலுதித்தன. இந்தச் சாபவிமோசனமாகவேண்டியகாலம் சேர்ந்ததினால் நாரதபகவான் கம்சனுடைய சபாமண்டபத்திற் கெழுந்தருளினர்.

அப்பொழுது கம்சன் அவரை உபசரித்து வந்த செய்தியாது? என்று வினவினன். நாரதர், 'நீ முன் ஜன்மத்தில் காலநேமி என்ற அசுரனாகவிருந்தாய்; உன்னை ஹரிரூபியான பகவான் கொன்றார்; இப்பொழுது நீ அரசனாக விளங்குகிறாய்; இனி, தேவகியின் வயிற்றில பகவான் அவதரித்துத் துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனஞ் செய்யபபோகிறார்; கோகுலததிற்பிறந்து விர்த்தியடையும் நந்தகோபன் முதலான கோபாலர்களும், அசோதை முதலிய கோபிகாஸ்திரீகளும், வசுதேவர் தேவகிப்பிராட்டி அக்ரூரர் முதலானவர்களும், உன் தந்தையாகிய உக்ரசேன மஹாராஜா முதலானவர்களும் தேவாம்சமுடையவர்களாய்ப பிறந்திருக்கிறார்கள் லோககண்டகர்களாகிய அசுரர்கள் தங்களம்சத்துடன் உனக்குத் துணைவர்களாகவும சேனைசமூஹங்களாகவும் இவ்வுலகத்திற் பிறநதிருக்கின்றனர்; இவற்றையெலலாம் நீ அறிந்துகொள்வாயாக என்றுரைத்து மறைந்தார். அனறுமுதல கம்சன் யாதவர்களைத் தேவக்குழுவினரெனக் கருதி அவர்களைக் கொல்வதிற் குறிப்புடையவனாயிருந்தான். தந்திரமாக வசுதேவரையும் தேவகியையு மழைத்து அவர்களை விலங்குபூட்டிக் காவலிலிட்டு ஆறு குழந்தைகளையும் கொன்றுவிட்டான்.

அதன்பிறகு கம்சன் அரசு வீற்றிருக்கின்ற தன் பிதாவாகிய உக்ரசேன மஹாராஜனை யணுகி நின்று, 'கொடும்பாவி! இனிமேலும் நீ அரசு வீற்றிருப்பதற்குரியவனோ? உனக்கு இம்மதிபபுத்தகாது; ஒரு க்ஷணமேனும் இந்த சிம்மாசனத்தில் வீற்றிருக்கலாகாது; என் சொல்லை மறுத்திருப்பையேல் படாதபாட்டைப் படுவாய்' என்று செவிசுடும் அடாப்பழிச் சொற்களைக்கூறி, உக்ர

(ரு) மாதாபிதாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் கைகேயி பக்க லிலும் ஹிரண்யன் பக்கலிலும் காணலாம்.

சேனரைச் சிம்மாசனத்தினின் றிறங்குமாறு அவர் அலமுறும் படி செய்தனன்.

இந்த இரண்டு வரலாற்றாலும புத்ரர்கள் பிதாவுக்கு ரக்ஷக ராகார்களென்பது வெளியாயிற்று.

(ரு) மாதாபிதாக்கள் புத்திரர்கட்கு ரக்ஷகராகமாட்டார்க ளென்பதற்குக் கைகேயியும் ஹிரண்யனும் சான்றுவார்கள்.

கைகேயி வரலாறு.—"விராவரும்புவிக்கெலாம் வேதமேயென இராமனைப பயந்தவெற்கிடருண்டோ?" என்று கைகேயி இராம பிரானைத் தான் பெற்ற பிள்ளையாகப பாவித்து இராமனிடததில் அளவறற அன்பு செலுத்தி வந்தனள். பின்னாக் கூனியின் கெட்ட உபதேசத்தால் மனநதிரிந்து தசரதனை யணுகி நின்று சம்பராசுர யுத்தகாலத்தில நீர் எனக்கு இரண்டு வரங்கள் தருவதாக வாக்களித தீரன்றோ! அவ்வரங்களை இபபொழுதே தரலவேணடும். அவை யாவன.— என் மகன் பரதனுக்கு அரசுரிமையைத் தரல்வேண்டு மென்பதும், இராமனைக் காட்டிறகனுப்பவேண்டு மென்பதுமாம்; என்று தசரதன் மனம் பதைதது உயிா துறக்கும்படி அவ்வரங் களைபபெற்று இராமபிரானை நோக்கி,

"ஆழிசூழுலகமெல்லாம்பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகடாங்கித்தாஙகருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானநண்ணிபபுண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின்வாவென்றியம்பினனரசனென்றான்"

'இவ்வுலகினை பரதனே ஆட்சிசெய்ய நீ தவவொழுக்கத்தை மேற் கொண்டு காட்டையடைந்து ஆஙகாங்குள்ள புண்ணிய தீர்த்தஸ் நானஞ்செய்து பதினான்குவருஷங்கழிந்தபிறகு இங்குவரக்கடவை' யென்று உன் தநதையாகிய தசரதர் ஆணையிட்டார் என்றுரைத்து இராமபிரானை வனவாசஞ் செய்யுமபடி செய்தாள்.

ஹிரண்யன் வரலாறு — இவன், தேவராலும், நரராலும், மிரு கங்களாலும பிறவற்றாலும் தனக்கு மரணமுண்டாகலாகாது என்று வரம் பெற்று மிக்க புஜபராக்ரமமுடையனுக தன்னுடைய

பெயரையே சொல்லி "உலகமேழுமேழும் வந்தடிதொழ வாசவீற் றிருந்தான்". இவனுக்குப் பிரஹலாதனென்ற ஒரு ஞானப்புத்திரன் பிறந்தான். அவனை பள்ளியில் வைக்கும் பிராயம வந்தவுடன் ஹிரண்யன் தன் குல குருவாகிய சுக்ராசார்யரை யழைத்து 'இவனுக்கு வேதங்களைப் பயிற்றுவிப்பீர்' என்று அனுப்பினான். சுக்ராசார்யர் பிரகலாதனை நோக்கி,

"ஓதப்புக்கவனுந்தைபேருரையெனலோடும்
போதத்தன்செவித்தொளையிருகைகளாற்பொத்தி
மூதக்கோயிதுநற்றவமன்றெனமொழியா
வேதத்துச்சியின்மெய்ப்பொருட்பெயரினைவிரியா"

உன் தந்தையின் பெயராகிய ஹிரண்யாயநம: என்று சொல்வாய் என்றனர். அப்பொழுது பிரகலாதன் தன் காதுகளை இருகரங்களால் நன்றாகப் பொத்திக்கொண்டு மூதறிவுடையதக்கோய்! நீ இங்ஙனம் கூறிய வுரை நற்றவப்பேற்றை யளிக்கத்தக்கதன்று என்று வேத சிரசிற் கூறும் ஸத்யப்பொருளாய் விளங்கும் ஸ்ரீ ஹரியினுடைய நாமத்தைக்கூறி இருகரங்களைச் சிரசிற் குவித்து ஆநந்தக்கண்ணீர் ததும்ப மயிர்க்கூச்செறிய பரவசமுற்றிருந்தான். இந்நிலைகண்ட சுக்ராசார்யர் நடுநடுங்கி அடா பாபி! என்னையு முன்னையுங் கெடுத்தொழிந்தனை. தேவரும் சொல்வதற் கஞ்சுகின்ற ஏதோ ஒரு பெயரை இங்ஙனம் கூறினையே; இது முறையோ வென்றனன். பிரகலாதன் என்னையும், என் தந்தையையும், உன்னையையும், இவ்வுலகத்தையும் உய்வித்தேன். பழமையான வேதத்தில் முதன்மையாகச் சொல்லப்படுகிற ஹரியின் பெயரைச் சொன்னேன். இது குற்றமாகுமோ? என்றனன். இதனைக்கேட்ட சுக்ராசார்யர், பிரகலாதனை நோக்கி பழமையான வானவர்க்கும் முதல்வற்கும் யாவர்க்கும் உன் தந்தையே முதல்வனாவான். அவனுடைய பெயரையே ஓதுதற்குரிய அந்தணனேன யான். சிறியனாகிய நீ என்னினும் அறிந்தவனனையோ? என்றனன். அதற்குப் பிரகலாதன் ஜகத்காரண வஸ்துவாகிய ஒருவனையன்றி மற்றொருவரின் பெயரை ஓதமாட்டேன்; யானுன்பால் அறிந்து கொள்ளத்தக்க விஷயமொன்றுமில்லை; எனவே, சுக்ராசார்யர் கவலையுற்று 'இனி இவன் நமக்கடங்கமாட்டான்' என்று கருதி விரைந்து சென்று ஹிரண்யனை யடைந்து, உன் மைந்தன் யான் கூறி

யதைக் கேளாமல் அடாத வார்த்தையைச் சொல்கின்றனென்றனன். ஹிரீண்யன் அவன்கூறிய வுரை யாது? என்று வினவினன். சுக்ரன், செவித்தொளையில் பாம்பு நுழைந்தது போன்ற குரூரமாக அவன்கூறிய வுரைகளை யானுரைப்பேனாகில் நாகமெய்துவன் என்னவும் வெந்துகுமென்றான்.

அப்பொழுது ஹிரண்யன், ஏவலாளரை நோக்கி 'என் மைந்தனை விரைவில் அழைக்கொண்டு வாக்கடவீர்' என்று கட்டளையிட்டான். அவர்களும் அழைத்துக்கொண்டுவர பிரகலாதன் ஹிரண்யனை வணங்கி நின்றான். ஹிரண்யன் பிரகலாதனை மார்போடெடுத்தணைத்துக்கொண்டு 'அப்பா! நம்மாசார்யர் சொல்லிய வுரையை மறுத்துப் பழுது கூறிய வுரை யாது? என்றனன். அதற்குப் பிரகலாதன், வேதத்தின் தொடக்கத்திற் சொல்லப்படுகின்றவன் யாவனோ? அவனே யாவர்க்கும் நாயகனுவான். அன்னவனது பெயரை நினைத்தாலும் கேட்டாலும் சொன்னாலும் துன்பக்கடலினின்று நீங்கலாமன்றோ! இன்னும் அப்பெயா விரும்பிய பலனனைத்தையு மளித்து வீடுபேற்றையும் தரும். இத்தகைய நமோநாராயண மந்த்ரத்தை பிர்மம ருத்திராதியர் முதலிய தேவர்களும் ஏனையோர்களும் மறபபரேல் அவர் நற்கெதியை மறந்தவராவார். எனதுயிர்க்கும், உம்முயிர்க்கும், இவவுலகிலுள்ள மன்னுயிர்க்கும் உறுதியாமென மதித்து இபபெயரை மொழிந்தேனேயன்றி வேறு பழுதொன்றும் கூறினேனலேன் என்று பணிவுடன் பகர்ந்தான்.

இதனைக்கேட்ட ஹிரண்யன் அடங்காகோபங்கொண்டு தழலெழ விழித்து அடா பயலே! அந்தக் காலமுதல் இக்காலம் வரை நீ கூறிய பெயரைச் சொன்ன வாயையும், கருதிய மனத்தையும், எனது ஒப்பற்ற ஆஜ்ஞையானது சுடுமன்றோ! அப்பெயரை உனக்கு எவருரைத்தனர்? உன்னுல சொல்லப்பட்ட அந்த ஹரியென்பவன் என்னோடு போர்செய்வதற்கெழுந்து ஆற்றாது கடலிற் புகுந்து இன்னும் பெயராது உறங்குகின்றானன்றோ! நம் குலத்தில் தோன்றிய கணக்கற்றவர்களை அந்தப் படுபாவியாகிய ஹரியே கொன்றான். அந்தக் குலபாதகனுடைய பெயரைச் சொல்வதற்கோ நானுன்னைப பெற்றேன்; உன்னை நான் இனி மகனெனறு மதிக்க மாட்டேன் என்று கொலையாளரை யழைத்து பிரகலாதனை மலையினின்று உருட்டுக; 'கடலிலும் கனலிலும் போடுக; யானையைக்

கொண்டு யிடரும்படி செய்க; நாகந் தீண்டும்படி செய்க; இன்னும் எவ்வகை செய்தேனும் இவன் உயிரை மாய்த்துவிடுவீர்கள் என்று ஆணையிட்டான். அவர்களும் அவன் கூறிய முறைகளில் ஒன்றும் தவறாமல் பிரகலாதனைப் படாதபாடுபடுத்தினர். துணையிலானாகிய பரம்பொருளையே துணையாகக் கொண்டானாதலால் பிரகலாதன் கொலையாளர் செய்த சூழ்ச்சியால் உயிர் மாயாதிருந்தான். அப் பொழுது ஹிரண்யன் அடங்காக் கோபமுற்று பிரகலாதனை நோக்கி நீ சொல்லுகிற அந்த ஹரியென்ற பயல எவவிடத்திலிருக் கிறானென்று கேட்க அதற்கவன்,

"சாணினுமுளனோ தன்மையணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன் மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன் முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றான்........."

எம்மிறைவன் எங்கும் நிறைந்துள்ளான்; நீ பரீக்ஷிதது ப் பார்க்க வேண்டுமென்றாலும் விரைவிற் செல்வாய் என்றான். ஹிரண்யன் தன் ஸபாமண்டபத்திலிருக்கின்ற தூணைப் புடைத்தான். அது தூணினின்றும் எம்பெருமான் நரசிங்கரூபமாய்த்தோன்றி ஹிரண் யனைக் கொன்று பிரகலாதனுக் கநுக்ரஹஞ் செய்தார்.

இந்த இரண்டு வரலாற்றானும் மாதாபிதாக்கள் புத்திரர்கட்கு ரக்ஷகராகமாட்டார்களென்பது புலனாயிற்று.

மேலும், புதல்வர்கட்கு மாதாபிதாக்கள் பாதுகாவலாகமாட் டார்களென்பதறகு லோகாநுபவங்களையும் தெரிவிக்கிறார்.—

(சு) மாதாபிதாக்கள் யௌவனவிரோதியென்று உபேக்ஷித் தல் என்றது மாதாபிதாக்கள் காமபோகத்திலே நோக்கமுடையவர் களாய் யௌவனபருவத்திலுள்ள தம் அவயவசோபைக்கு விரோதி யென்று புத்திரனை உபேக்ஷித்து அகற்றி விடுவார்கள் என்றவாறு. அஃதாவது அநுபவயோக்யமான அவயவசோபை அழிந்துவிடு மாறு இவன் பிறந்தனனே என்று அக்குழந்தையை எங்கேனும் போட்டுவிடுவார்களென்பதாம். பரபுருஷகாமினியாகிய ஒருத்தி 'இவன் நம் யௌவனருப விரோதியாகப் பிறந்தனனே' என்று

(எ) க்ஷாமகாலம் வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலே போகடு தல்.

(அ) விலை கூறி விற்றல்.

வெறுப்புற்று இரக்கமின்றி அம்பகவைஹத்தி செய்வதுமுண்டு. இங்கு யௌவனம் என்பது லக்ஷணையாக யௌவனபருவத்திலுள்ள அவயவசோபையையும் யௌவனாநுபவத்தையு முணர்த்தி நின்றது.

(எ) மாதாபிதாக்கள் பஞ்சகாலத்தில் பசிக்கொடுமையினிமித்தமாகக் காப்பாற்றாதற் காற்றாது குழந்தைகளைப் பிறரறியாமல் ஆர்பண்டியபுதர்களிற் போட்டுவிடுவார்கள். பிறர் கண்டால் பழிதூற்றுவார்களென்ற அச்சமிருக்குமாதலால் இங்கு ஆட்பார்த்து தூற்றிலே போகடுதல் என்றார்.

(அ) மாதாபிதாக்கள் ஜீவிப்பதற்காகப் பிள்ளைகளை விலை கூறி விற்பதுமுண்டு. இதற்குச் சான்றாக சுனச்சேபன் வரலாறும் இங்கறியத்தக்கது. அது வருமாறு.—

அம்பரீஷமஹாராஜன் புருஷமேதஞ்செய்ய ஒரு ஆண்மகனைப் பெறுதற்குப் பொற்றேரில ஆரோகணித்து, காடு முதலிய பல விடங்களிலும் தருவிச்சென்றான். இரிசிகமஹரிஷி வசிக்கின்ற இடத்தையடைந்தான். அவருக்கு மூன்று புதல்வர்களுண்டு. மிகவும் வறுமையுடையவர். அவரை அம்பரீஷன் பார்த்து உம்முடைய புத்திரர்களுள் எவனையாவது ஒருவனை எனக்குக் கொடுக்கவேண்டும். அதற்காக வேண்டிய பொருளைக் கொடுக்கிறேன் என்றான். இரிசிகர் அதற்குடன்பட்டு ஜ்யேஷ்ட புத்திரனிடத்தில் எனக்கு மிகவும் பிரியமுண்டென்றார். அவருடைய மனைவி எனக்கு இளையோனிடத்தில் மிகுந்த அன்புண்டென்றாள். நடுவுளோன் ஆகிய சுனச்சேபன் எழுந்து நின்று அரசனை நோக்கி யானே உமக்கு விலைப்பொருளாக வருகிறேன். என்னுடைய மாதாபிதாக்களுக்கு வறுமை நீங்கும்படி வேண்டிய பொருளைக்கொடுப்பீர்' என்றனன். அரசன், 'நாமெண்ணிவந்த காரியம் எளிதிற கைகூடியது' என்று களிப்புற்று இரிசிகர்க்கு வேண்டிய பொருளைக்கொடுத்து அவர் புதலவனை இரதத்தின் மீதேறிக்கொண்டு சென்றுகொண்டிருக்

(கூ) ஆபத்து வந்தவாறே நெகிழ நினைத்தல்.

கின்றபொழுது சூரியன் உச்சிநிலையை யடைந்தான். அரசன் அவ விடத்தில் இரதத்தை நிறுத்திவிட்டு ஸந்தியாவந்தனஞ் செய் தற்குச் சென்றான். சுனச்சேபன் அதிஷ்ட வசத்தால் தன்னுடைய மாதாவுடன் பிறந்தவராகிய விசுவாமித்ர முனிவரை அங்குக் கண் டான். அவருடைய பாதங்களில் விழுந்து அலமலருற்றான். முனி வரர் உனக்கு நேர்ந்த ஆபத்தென்னை? என்று வினவினர் சுனச் சேபன் என்னுடைய தாய்தந்தையர்கள், அம்பரீஷன் * புருஷ மேதம் செய்தற்கு என்னை யாக பசுவாகக் கொடுத்தார்கள். அவன் செய்யும் யாகத்திறுதியில் எனக்கு மிறுதியுண்டாம்; எனசெய்வே னென்றான். விசுவாமித்ரர் நான் உன்னுயிரைத் தடுக்கிறேன். நீ அஞ்சாதே என்று தம் புத்திர நாலவரை நோக்கி அரசனோடு செல வீர்கள் என்றனர். அவர்கள் மறுத்து அகன்றார்கள். விசுவாமித் திரர் கோபமுற்று அவர்களை வேடராகக் கடவீர் என்று சபித்தார்.

அதன்மேல் மருகனாகிய சுனச்சேபனை நோக்கி இரண்டு மந்தி ரத்தை உபதேசித்து, 'நீ அரசனோடு சென்று ‡ யூபத்திலுன்னைக் கட்டும்போது இந்த மந்திரங்களை ஜபிப்பாய்; உடனே பிர்ம்மாதி தேவர்களெல்லாம அங்கு வந்து கூடுவார்கள்; அதனால அரசனு டைய வேள்வியுமுற்றுப்பெறும்; உன்னுயிருக்கு மிறுதியுண்டாக மாட்டாது' என்றனர். சுனச்சேபனுமவ்வாறே செய்ய அம்பரீஷன செய்த வேள்வியிடத்தில் பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்கள தேவர்கள் சூழ பிரசன்னமானார்கள். அதனால் வேள்வியுமுற்றுப்பெற சுனச் சேபனுமுயிர்பெற்று வாழ்ந்தான்.

இந்த வரலாற்றால் மாதாபிதாக்கள் தாம் பெற்ற புதல்வர்களை விலை கூறி விற்றலுமுண்டென்பது பெறப்பட்டது.

(கூ) ஆபத்துவந்தவாறே நெகிழ நினைத்தல் என்றது மாதா பிதாக்கள் தமக்கு ஆபத்து நேர்ந்தபோது தாம் பெற்ற குழந்தை களை நழுவவிட்டு வாழ நினைப்பார்களென்றவாறு.

---

* புருஷமேதம்-புருஷ யாகம். அஃதாவது— புருஷனுடைய மாம்ச விசேஷத்தை யெடுத்து ஹவிப்பாகஞ்செய்து அதனைத் தேவர்கட்கீதலாம்.

‡ யூபம்-வேள்வித்தூண

(௰) அர்த்த க்ஷேத்ராதிகளுக்காக எதிரிட்டுக்கொல்லுதல்.

(௰க) *முடியுமவஸ்தையிலே "சோர்வினால் பொருள் வைத்த துண்டாகில் சொல்லுசொல்லென்று சுற்றுமிருந்து" என்கிறபடியே ஈசுவரனை ஸ்மரித்துக் கரைமரம் சேரவோட்டாதபடி யலைத்தல் முடித்தல் செய்யாநிற்பார்கள்.

(௰உ) ஸ்திரீகளுக்கு பர்த்தாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் தர்ம புத்ராதிகள் பக்கலிலும், நளன் பக்கலிலும் காணலாம்.

(௰) அர்த்த க்ஷேத்ராதிகளுக்காக எதிரிட்டுக் கொல்லுதல் என்றது பொருள் பூமி முதலிய ஸம்பத்துக்களைத் தாமே யனுபவித்தற்காகப் புதல்வர்களோடு எதிரிட்டுக் கொல்வார்கள் என்றவாறு. ஒருவனுக்கு இரண்டு மனைவியரிடத்திற்பிறந்த புதல்வர்களுள் இளையாள் வயிற்றிற் பிறந்த புத்திரர்களிடத்தில் அன்புற்று மூத்தாள் வயிற்றிற் பிறந்த புதல்வர்களைக் கொல்லத் துணிவதையும் உலகிற் காணலாம்.

(௰க) மாதாபிதாக்கள் புதல்வர்களின் உயிர் முடியும் நிலைமையில் 'நீ எங்களை யறியாது மறதியால் எங்கேனும் பொருள் வைத்திருப்பதுண்டாகில் சொல்லுவாய்; சொல்லுவாய் என்று சுற்றியிருந்து கொண்டு ஸர்வேசுவரனை நினைத்துக் கடத்தேற வொட்டாமல் அலைச்சல்செய்து முடித்துவிடுவார்கள்.

(௰உ) மனைவியர்க்கு மணாளர்கள் ரக்ஷகராகமாட்டார்களென்பதற்குப் பஞ்சபாண்டவர்களும், நளனுஞ் சான்றுவார்கள். [தர்ம புத்திராதிகள்—தர்மபுத்திரர் முதலான பாண்டவர்கள்.]

பஞ்சபாண்டவர் வரலாறு.— *தர்மபுத்திரர் இராஜசூய யாகம் முடித்து வீமன் முதலிய தம்பிமார்களோடு இஸ்திரப் பிரஸ்தத்தில் யாவரும் மதிக்குமாறு வாழ்ந்திருந்தனர். திரியோதனாதியர் பாண்டவர்கள் வாழ்வினை நோக்கிப் பொறாமைகொண்டு 'இவர்களைச்*

"சோர்வினால்பொருள்வைத்ததுண்டாகில்சொல்லுசொல்லென்றுசுற்று மிருந்து ஆர்வினவிலும்வாய்திறவாதேஅந்தகாலம்அடைவதன்முன்னம் மார்வமென்பதோர்கோயிலமைத்துமாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்குஅரவதண்டத்திலுய்யலுமாமே"

இது. பெரியாழ்வாரருளிச்செய்தது.

சூதுபோரால் வஞ்சித்து வெல்லவேண்டும்' என்று சகுனி முதலி யவர்களோடு ஆலோசித்துத் தருமபுத்திரரை வரவழைத்து சூது பொருது வென்றனர். அப்பொழுது துரியோதனன் துச்சாஸ னனைநோக்கி 'ஐவருக்கொருத்தியாகிய திரௌபதியும் நமக்கடிமை யாய் விட்டாளாதலால் அவளை அரசர்கள் கூடிய ஸபையில் அழை த்து வருவாய்' என்று ஏவினன். அக்கொடியோன் திரௌபதியின் பாற்சென்று 'உன் கணவன் சூது போரால் எல்லாப் பொருள் களையும் தோற்றுத் தன்னையும் தம்பிமார்களை உன்னையும் தோற் றான். ஆதலால் 'நீ வருவாய்' என்று அவள் உடல் மண்மேற்படிய கண்டாரெல்லாம் இஃதோர் உற்பாதமோ? என்று ஆற்றொணுத் துன்புற்றாற்க் குழலைபபிடித்திழுத்து அரசர் குழுமிய ஸபையிற கொணர்ந்து நிறுத்தினன். அப்பொழுது வீமன் முதலிய நால வருக்கும் சினமூண்டது. தர்மபுத்திரர் அவர்களை யடக்கினர்.

திரௌபதி, தன் குழலசோர தரையில் விழுந்து கோ! கோ!! வென்று வாய்விட்டழுதனள். இதுகண்ட துச்சாதனன் திரௌ பதியை நோக்கி அரசர்கள் கூடிய இச்சங்கத்தில் உன் மாமனும் உன் கணவன்மார்களும் மற்றுமுறவினரும் கூடியிருக்கின்றார்கள்; இவ்விடத்திற் கண்ணீர்விட்டழுகின்றனையோ; உனக்கென்ன கஷ் டம் நேர்ந்தது? பொதுமகளிர்க்கு விழிநீர் விடுதல் எளிதன்றோ'' என்று புன்சொற் புகன்றான. இவ்வுரையைக்கேட்டு மாளாவிருந்த ஸபையோர்களைத் திரௌபதி நோக்கி 'என் கணவன் தம்மைத் தோற்றபிறகு என்னைத தோற்றனரோ? என்னைத தோற்றபிறகு தன்னைத் தோற்றனரோ ? நியாயமுரைப்பீர்' என்றனள். ஆங்கு இருந்தாரெல்லாம் ஊமையர்போலப் பேசாதிருந்தனர்; அதுசமயம விகர்ணன் திரௌபதி படும்பாட்டைக்கண்டு வருந்தமுற்று அவை யினரை நோக்கித் தர்மபுத்திரர் தம் பொருள்களையும தம்மையு முன்பே தோற்றுவிட்டு அதன்பிறகு திரௌபதியை வைத்துத் தோற்றது நியாயமுறைப்படியாகாதென்று சொல்லமாட்டீர்களோ! என் றனன்.

அப்பொழுது கர்ணன் வெகுண்டு விகர்ணனுடைய வாயை யடக்கினன். அதனமேல் துரியோதனன் துசசாதனனை யழைத்து, இனிச் சிறிதும் தாமதிக்காமல் இந்த ஸபையில மானமிலலாதிருக கின்ற பாண்டவர்களையும், நம் முன்பு நகைத்த பாஞ்சாலி

(௰௫) இவர்கள் ரக்ஷகரல்லரேயாகிலும் நாட்டார்க்குக் கண்காட்டியாய்ப் போருகிற சந்திராதித்யர்கள் ரக்ஷகராகக்குறையென்னென்னின்; அவர்களும் ஈசுவராக்ஞைக்கஞ்சி, தாங்கள்நினைத்தபடி சஞ்சரிக்

யையும் துகிலுரிவாயாகவென்று கட்டளையிட்டனன். துச்சாதனன் சிறிதும் இரக்கமின்றித் திரௌபதியின் துகிலுரியத்தொடங்கினன். திரௌபதி அங்கிருந்த தன் பர்த்தாக்களும், பெரியோர்களும் துணையாகாதிருந்தமை கண்டு தன்னிருகையையும்விட்டு,

"ஆறாகியிருந்தடங்கணஞ்சனவெம்புனல்சோரவளகஞ்சோர
வேறான துகிறகைந்தகைசோரமெய்சோரவேறோர்சொல்லும்
கூறாமற்கோவிந்தாகோவிந்தாவென்றரற்றிக் குளிர்ந்துநாவில்
ஊறாதவமிழ்தூறவுடல்புளகித்துள்ளமெலாமுருகினளே"

என்று கண்ணபிரானைச் சரண்புகுந்தனள். கண்ணபிரான் அவள் மனத்தின்கண் தோன்றித் துன்பத்தை யகற்றி வஸ்திர ப்ரதானமுஞ்செய்தனன்.

நளன் வரலாறு.— இவன் நிஷததேசத்தை அரசாண்ட செங்கோன் மன்னன். காலவசத்தால் புஷ்கரனோடு சூது போர்செய்து நாடு நகர முதலிய எல்லாச் சம்பத்துகளையும் இழந்து காட்டை நோக்கிச் செல்லலுற்றனன். அப்பொழுது கற்பிற்சிறந்த தன் மனைவியாகிய தமயந்தியும் பின்தொடர்ந்து வந்தாள். இருவரும் இராப்பொழுதில் ஓரிடத்தில் துயின்றுகொண்டிருந்தனர். நளன் நள்ளிரவில் கண்விழித்துத் தானடைந்த நிலைமைக்கிரங்கி, 'இனி நாம் இவளுடன் கூடியிருந்து இவளைப் பாதுகாப்பது நம்மாலாகாது' என்று அப்பொழுதே அவளறியாமல் அவளைவிட்டகன்றான். தமயந்தி விடிவேளையில் விழித்துப் பார்த்துத் தன் கணவனைக் காணாதிரங்கித் தன் தந்தையிருக்கையை யடைந்தனள். நளன் ருதுபர்ணனை யடைந்து அவனுக்குச் சாரதியாயமர்ந்திருந்தனன்.

பர்த்தாக்கள், ஸ்திரீகட்குச் சக்தியில்லாத நிலைமையிற் பாதுகாவலராகாதிருப்பதுபோலச் சக்தியுள்ள நிலைமையிலும் ரக்ஷகராக மாட்டார்களென்பதை இந்த இரண்டு வரலாற்றாலு மறியலாம்.

(௰௬) இதுவரையும் உடன்பிறந்தார் முதலிய உறவினர் ரக்ஷகராகமாட்டார்களென்பதைப் பல இதிஹாஸங்களாலெடுத்து விளக்கினார். இனிக் கண்ணிற்கு விஷயபூதர்களாயும், தேவதாஸ்வ

கப்பெறுதே நாழிகைக் கூறிட்டு உதிப்பது அஸ்தமிப்பதாய்க்கொண்டு போருகையாலும், ஹிரண்யராவணாதிகள் கையிலே யகப்பட்டு அவர்கட்கு இழிதொழில் செய்வார் சிலராகையாலும் ரக்ஷகராகமாட்டார்கள்

(மசு) த்ரைலோக்யத்துக்கும் பாலகனான இந்திரனும், 'எப்போது நம் பதம் நழுவப்புகுகிறது' என்றஞ்சி சாபோபஹதனாய் இந்திரஜித்தின்

ரூபிகளாயும், தோஜோரூபிகளாயும் விளங்குகின்ற சந்திரசூரியர்களும் ரக்ஷகராகமாட்டார்களென்பதைத் தெளிவாக அருளிச் செய்கிறார்.—

இவர்கள்-உடன்பிறந்தார் முதலானவர்கள். கண்காட்டிகளாய்-உலகிலுள்ள பொருள்களைக் கண்ணிற்கு விஷயமாம்படி செய்கின்றவர்களாய். அஸ்தாவது-இருட்டினால் உலகிலுள்ள பொருளின்னதென்று விளங்காதிருப்பதைத் தம்முடைய கிரணங்களால் அவ்விருட்டினை யாற்றிப் பதார்த்தங்களைக் கண்ணிற்கு விஷயமாம்படி செய்வார்களென்பதாம். அவர்களும் ஈசுவராஜ்ஞைக்கஞ்சிஎன்றது அந்தச் சந்திரசூரியர்களும் ஸர்வேசுவரனிட்ட கட்டளையைக் கடப்பதற்கஞ்சி என்றவாறு. நாழிகைக் கூறிட்டு என்றது இத்தனை நாழிகைக்கு இத்தனை காதம் நடப்பதென்று பங்கிட்டு என்றவாறு. உதிப்பது அஸ்தமிப்பது-தோன்றுவது மறைவது. இதுவவை சந்திர சூரியர்கள் ஸ்வதந்த்ரரல்லரென்பதை விளக்கினார். இனி, இவர்கள் அசக்தராவரென்பதையுந் தெரிவிக்கிறார்.— ஹிரண்யராவணாதிகள் கையிலே யகப்பட்டு என்றது ஹிரண்யராவணன் முதலானவர்கள் வசப்பட்டு என்றவாறு. அவர்களுக்கு இழிதொழில்செய்து திரிவார் சிலர் என்றது அவர்கட்குப்பயந்து அவர்களிட்ட ஏவலின்படி நடக்கின்றவர்கள் என்றவாறு, தேவத்வ தாமதத்தையுடையவராகிய சந்திரசூரியர்கள் தம்மிற்றுழ்ந்த அசுரராக்ஷஸர்கட்குப் பயந்து அவர்களிட்ட கட்டளையின்படி நடப்பதே குறைவாதலால், 'அவர்களுக்கு இழிதொழில்செய்து திரிவார் சிலர்' என்று அருளிச் செய்தார்.

இதனால் சந்திரசூரியர்கட்கு ஸ்வாதந்த்ர்யமும், சக்தியுமில்லையென்று பெறப்பட்டனவாதலால் இவர்கள் ரக்ஷகராகாரென்பது தெளிவு.

(மசு) இனி, ஆகம ப்ரஸித்தரான தேவதைகளும் ரக்ஷகராகமாட்டார்களென்பதை விளக்குகிறார் —

கையிலே யகப்பட்டுக் கட்டுண்டு, மஹாபலிபோல்வார் கையிலே ஐசுவர்யத்தைப் பறிகொடுத்துக் கண்ணுங் கண்ணீருமாய், கழுத்துங் கப்படமுமாய்க்கொண்டு திரிவானொருவனாகையாலே அவனும் ரக்ஷகனாக மாட்டான்.

(ய௫) பிர்ம்மாவும் மதுகைடவர்கள் கையிலே யகப்பட்டு வேதங்களைப் பறிகொடுத்துக் 'கண்ணிழந்தேன்; தனமிழந்தேன்' என்று

தனைப் போக்யதைக்குப் பாலகனை இந்திரன்-ஸ்வர்க்கமத்ய பாதாளமென்ற மூன்றுலோகத்திற்கும் ரக்ஷகனை இந்திரன். எப்போதே நமது பதம் நழுவப்புகுகிறதோ என்று அஞ்சியென்றது எப்பொழுது நம்முடைய இந்திரபதவி தப்பிவிடுமோ, என்று பயந்து என்றவாறு. நூறுயாகஞ் செய்தவர்கள் இந்திர பதவியை யடைதற்குரியவராவார். எவரேனும் நூறுயாகங்களை முற்றுப்பெறச்செய்து தன்பதவியை யடைந்துவிடுவாரோ? என்று இந்திரன் அச்சமுற்றுக் கொண்டிருப்பான். சாபோபஹதன்—சாபத்தால் பீடிக்கப்பட்டவன். ஒருநாள் இந்திரன் பவனி வருகின்றபோது துர்வாசமஹரிஷி ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் பிரஸாதமாகிய திருமாலையைக் கொடுத்தனர். அதனை இந்திரன் பெருமையாக ஏற்றுக்கொள்ளாமல் அங்குசத்தால் வாங்கி ஐராவதத்தின் மத்தகத்திலே வைக்க, அது தன் துதிக்கையால் எடுத்துக் காலில் இட்டுத் துவைத்தது. அதனைக்கண்ட துர்வாசர் இந்திரன் ஐசுவர்யமெல்லாம் கடலில் விழுந்து மாயுமாறு சபித்தனர். மேலும் இவன் கௌதமரின் பத்தினியாகிய அகலிகையைக் காமுற்று அவரால் சபிக்கப்பட்டனன். இந்திரஜித்-இராவணன்மகன். இவன் இந்திரனை ஒருகாலத்தில் சிறையிலிட்டான். இந்திரனை வெற்றிகொண்ட காரணத்தினாலே இராவணன் புதல்வனுக்கு இந்திரஜித்தென்று பெயர் வழங்கலாயிற்று. மஹாபலி - பிரஹலாதனுடைய பேரன்; மிக்க வலிமையுடையவன். இவன் இந்திரனையும் ஜயித்துத் தேவலோகத்தையும் ஆண்டான். அதனால் இந்திரன் கண்ணீர்விட்டு கழுத்தில் ஒரு வஸ்திரத்தையுங் கட்டிக்கொண்டு திரிந்தான். (கப்படம்-வறுமையைக் குறிப்பித்தோன்றக் கட்டிக்கொள்ளும் வஸ்திரம்) யாவரும் மதிக்குமாறு மிகுந்தசம்பத்துடன் வாழ்ந்தவன் வறுமையையடைந்து விடுவானேல், அவன் "நான் முன்பு இவ்வாறிருந்தவன் இப்படியாயினேன்" என்று தன்னிலைமையைச் சொல்வதற்கு நாணமுற்றுக் கழுத்திலொரு வஸ்திரத்தைக் கட்டிக்கொள்வது பண்டைக்காலத்து வழக்கு.

இந்திரனுடைய வரலாறு இங்ஙனமிருப்பதால் இவனும் ரக்ஷகனாகமாட்டானென்பது வெளிப்படை.

(ய௫) பிர்ம்மா மதுகைடவர்கள் கையிலகப்பட்ட வரலாறு.—பிர்ம்மா ஒருசமயம் "நாம் எல்லா லோகங்களையுமுண்டுபண்ணு

நிலந்துலாவுகையாலும், ருத்ரன் கையிலே தலையறுப்புண்கையாலும் ரக்ஷகனாகமாட்டான்.

கின்றோமாதலால் நாமே பரதேவதையாவோம்; நம்மைக்காட்டிலும் வேறொருவருமில்லை, என்று அஹங்கரித்தான். ஸர்வேசுவரன் இவ்வஹங்காரத்தைப் போக்கவேண்டுமென்று பிர்ம்மதேவனுடைய காதுகளினின்று மதுகைடவன் என்ற இரண்டு அசுரர்களைச் சிருஷ்டித்தான். அவர்கள் மிக்க வலிமையுடையவர்களாதலால் பிர்ம்மா துன்புறும்படி தாக்கி ‡ வேதத்தைப் பறித்துக்கொண்டோடினர். அப்பொழுது பிர்ம்மதேவன், "அந்தோ! நாமே பரதேவதை யாவோம் என்று அஹங்கரித்ததாலன்றோ நமக்கு இக்கதிநேர்ந்தது என்று" மிகுந்த துயரமுற்று எம்பெருமானை யடைந்து "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஸர்வேசுவரன் இரங்கியருளி மதுகைடபர்களைக்கொன்று பிர்ம்மாவுக்கு வேதத்தைக் கொடுத்தனன். கண்ணிழந்தேன் என்றது அறிவிழந்தேன் என்றவாறு. ஈண்டுக் கண்ணென்றது ஞானக்கண்ணை. தனமிழந்தேன் என்றது வேதமாகிய பொருளையிழந்தேன் என்றவாறு. ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாபங்கட்குத்தக்கவாறு நன்கறிந்து சிருஷ்டிப்பதற்கு நுண்ணிய அறிவு வேண்டும். அவ்வறிவும் வேதப்பயிர்ச்சியாலுண்டாகும். அத்தகைய வேதமே பிர்மமாவுக்குத் தனமாம். நிலந்துலாவுகை யென்றது தரையைத்தடவுதல் என்றவாறு. வலியுடையான் ஒரு காரணத்தால் தன் வலிமையிழந்தபோதும், அவமானம் வந்துற்றபோதும் ஒரு செயலையுஞ் செய்தற்கியலாது வாளா தரையை கால்விரல்களால் கீண்டிக்கொண்டிருப்பதுண்டு. இராவணன் முதற்போரில் இராமபிரானுக் காற்றாது செயலொழிந்து நின்றபோது, "அறங்கடந்தவர் செயலிதென் றுலகெலாமார்ப்ப, நிறங்கரிந்திட நிலம்விரல்கிளைத்திட நின்றான்" என்றபடி தன் கால்விரல்களால் தரையைக் கிளைத்துக் கொண்டு நின்றான் என்பதும் இங்கறியத்தக்கது.

ருத்திரன் கையால் தலையறுப்புண்ட வரலாறு.—

முன்னொரு காலத்திலே சிவன், தன்னைப்போலவே பிர்ம்மதேவனுக்கும் ஐந்து தலையுடையவனாயிருப்பது பலருங்கண்டு ஐயுறுதற்கிடனாயிருக்கிறதென்று கருதி அவனது சிரமொன்றைக் கிள்ளி

---

‡ மதுகைடவர்கள், பிர்ம்மாவைத்தாக்கிப் புடைத்தவுடன் ஸர்வேசுவரன் தான் முன்பு ஓதுவித்த வேதமெல்லாமறக்கும்படி ஸங்கல்பிக்க அவன் மறந்தனன். இந்த விஷயம் யாவர் மனததிலும் ஸ்தூலமாகப் பதியுமாறு பிர்ம்மதேவனிடத்திலுள்ள வேதத்தை மதுகைடவர்கள் பறித்துச் சென்றார்களென்று சொல்லப்பட்டது. இங்ஙனங் கொள்ளாதபோது சப்தஸ்வரூபமாயுள்ள வேதத்தைப் பறிப்பது யாங்ஙனமியலும்? என்று வினாவெழும்.

(மகூ) ருத்ரனும் ஸகல ப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாகவுடையனாய், விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாற்போலேயிருக்கத் தழனிறவண்ணனாய், தன்னை ஆசிரயித்தவர்களை 'அறுத்துத்தா பொரித்துத்தா' என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக்கொள்கையாலும், தன்னை ஆசிரயித்த வாணனை, 'தலையில் பூவாடாதே நோக்குகிறேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, தன்னைத்தொழுத கைகளைக் கள்ளிக்காடு தீய்த்தாற்போலே தீய்க்கக்கண்டு 'உயிருண்டாகில் உப்பு மாறி யுண்ணலாம்' என்று நெற்றியில் கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவினவனாகையாலும், லோககுருவாய்த் தனக்குப் பிதாவான பிர்ம்மாவின் தலையைத்திருகி பாதகியாய், கூறுசெய்த வூரிலே குறும்புசெய்து கையும் கைத்தலையுமாய்க்கொண்டு திரிவாரைப்போலே, கையும் கபாலமுமாய், திறந்து கிடந்த வாசல்கள் தோறும் புக்குத் தன்னை வெளியிட்டுக்கொண்டு திரிவானொருவனாகையாலும் ரக்ஷகனாகமாட்டான்.

னன். உடனே அந்தக் கபாலமானது சிவனுடைய கையைப்பற்றிக் கொண்டது. அப்பொழுது சிவன் 'இனி இந்தக் கபாலத்தை யகற்றுதற்குபாயம் யாது?' என்று சிந்திக்கலாயினன். தேவர் முதலானவர்கள் 'இந்தப் பாபமகலப் பிச்சை யெடுக்கவேண்டும்; எப பொழுது கபாலம் நிறையுமோ, அப்பொழுதே இது கையைவிட்டகலும்' என்று சூழ்ச்சி எடுத்துரைத்தனர். சிவபிரானும் அவ்வுரையை மேற்கொண்டு பல க்ஷேத்திரங்கடோறும் திரிந்து பிச்சை யேற்றவிடத்தும் அக்கபாலம் கையைவிட்டகலாது முன்போலவே துன்புறுத்தியது. அதன்மேல் சிவபிரான் பதரிகாச்ரமஞ் சென்று ஆங்கெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை வணங்கித் தன்குறை யிரந்தனன். எம்பெருமானும் அக்கபாலம் நிறையுமாறு பிச்சை யிட உடனே அது சிவனுடைய கையைவிட்டகன்றது.

'இவ்வரலாற்றான் பிர்ம்மதேவனும் ரக்ஷகமாக மாட்டானென்பது தெளிவிற் புலனாயிற்று.

(மகூ) ரக்ஷகத்வ தர்மம் சிவனிடத்திலுமில்லை யென்பதைத் தெரிவிக்கத் தொடங்குகின்றவர் முன்னர் 'ஸகல ப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாகவுடையனாய்' என்றருளிச் செய்தார். இதனால் ஸம்ஹார கர்த்ருத்வ தர்மமொன்றுதான் சிவனிடத்திலுண்டென்பது புலனாயிற்று. இதனை மேலும் வலியுறுத்துகிறார்.—விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாற்போலே யிருக்கத் தழனிற வண்ணனென்றது 'வெயிலில் உழன்று தாகவிடாய் கொண்டவன் முகத்தில நெருப்பைப் பெய்தால் அது அவனுக்கு எவ்வளவு துன்பத்தைத் தருமோ அதுபோல தாபத்ரயாக்னியால விடாய்கொண்டானுக்குச் சிவனுடைய தரிசனம் துன்பத்தையே தரும்; அவன் அக்னிபோன்ற வடிவினனாயிருப்பதால என்றவாறு.

தன்னை ஆசிரயித்தவர்களை என்றது தன்னைப்பற்றியிருக்கும் மெய்யடியார்களை என்றவாறு. அறுத்துத்தா பொரித்துத்தா என்று கொடுந் தொழில்களைச் செய்வித்துக் கொள்கையாலும் என்றது மாமிசத்தை யறுத்துச் சமைத்துத்தா, அதனைப் பொரித்துத்தா என்று அன்பருள்ளம வருந்தும்படி கொடியதொழிலைச் செய்யும்படி செய்பவனாய் என்றவாறு. சிவபிரான் தன் மெய்யடியாராகிய சிறுத்தொண்டநாயனாரிடத்தில் நரமாமிசம் விரும்பி நின்ற வரலாறும் இங்கறியத்தக்கது. அது வருமாறு.—

சிறுத்தொண்டநாயனார் செங்காட்டங்குடியில் வேதியர்குலத்திற் பிறந்தவர். வேதாதிசாஸ்திரங்களையும் இராஜ தந்திரங்களையும் நன்கு பயின்றவர். சிவனடியாரிடத்திலும், சிவனிடத்திலும் நீங்காத அன்பு படைத்தவர். இவர், வெண்காட்டுநங்கை என்னும் தமது மனைவியாருடன் இல்லறம் நடத்தித் தம்மைத் தொண்டர்களிற் சிறியவர் என்று மதித்துச் சிவனடியார்களை ஆராதித்துக்கொண்டு வருகிறகாலத்தில் சிவன் வைரவவடிவங்கொண்டு இவரது இல்லத்திற்கு வந்தனர். நாயனார் கண்டு மகிழ்வுற்று அடியவரை அமுது செய்தற் கழைத்தனர். அடியவர், 'நாம் ஆறு மாதத்திற் கொருமுறைதான் அமுது செய்வோம்; அவ்வுணவு நரமாமிசத்துடன் கூடியதாயிருத்தல் வேண்டும்; அவ்வூன், ஒரே புத்திரனாய் அங்கப பழுதிலாதவனாய் ஐந்து வயதுள்ளவனாயிருக்கும் சிறுவனை ஒருறுப்புங் குறையாமல் சமைத்ததாயிருத்தல் வேண்டும் என்றனர். இதனைக்கேட்ட நாயனார் அடியவர் விருப்பப்படியாம் செய்தற் குடன்பட்டுத் தம் மனைவியிடம் தெரிவித்தனர். அவளும் சிறந்த கற்புடையவளாதலால் சம்மதித்தனள். பின்னர் அவ்விருவருஞ் சேர்ந்து தமது அருமைப்புதல்வனாகிய சீராளனை ஹத்திசெய்து தலையொன்று மாத்திரம் நீங்கலாக மற்றெல்லா அவயவங்களையும் பாகஞ்செய்து அடியவரையழைத்து 'ஸ்வாமீ! உம்முடைய திருவுளப்படி செய்தேன்; அங்கீகரிக்கவேண்டும்' என்று உண்கலத்திற் படைத்தனர். அடியவரும் உண்கலத்தில் வைக்கப்பட்டுள்ளவற்றை வரிசையாக எண்ணிப்பார்த்து, தலைக்கறிமாத்திரம் குறைகிறதே என்று குறை கூறினர். நாயனாரும் அதனையும் பாகஞ்செய்து படைத்தனர். அதன்மேல் அடியவர் உண்ணப்புகும்பொழுது 'நம்முடன் கூடியிருந்துண்பதற்கு ஒரு சிவனடியார் வேண்டும்' என்றனர். நாயனார் பலவிடங்களிலும் அலைந்து பார்த்து 'எவ்விடத்திலும் சிவனடியார்களைக் காணேன்' என்று தெரிவித்தார். அடியவர் அப்படியானால் நீரே நம்முடனிருந்து உண்பீர்' என்றனர். நாயனார், அதற்குமுடன்பட்டு 'அடியவர் பசித்திருக்கின்றனரே' என்று உண்பதற்கு விரைந்தனர். அப்பொழுது அடியவர் நாயனாரைத் தடுத்து, 'உமக்குப் புத்திரனிருந்தால் நம்முடன் கூடியிருந் துண்ப

தற்கு அழையும்' என்றனர். நாயனார் அடியவரின் கட்டளை மறுப்பதற்கஞ்சி மனவருத்தமுற்றுத் தெருவிற் சென்று சீராளா! என்றழைத்தனர். குமாரன் விரைந்தோடி வர நாயனார் கண்டு மகிழ அடியவராய் வந்த சிவன் மறைந்தனர். சிறுத்தொண்டர்க்குச் சிவன் பின்பு அருள்செய்தாரென்றாலும் முன்னர் அவர் மனம் வருந்தும்படி செய்தது அருட்சிறிதுமில்லாத செயலாகும். இதனால் சிவன் துராராதன் என்பது பெறப்படும்.

தன்னை ஆசிரயித்த வாணனை என்றது தன்னை ரக்ஷகமாகப் பற்றின வாணாசுரனை என்றவாறு. தலையில் பூவாடாதே நோக்குகிறேன் என்று பிரதிஜ்ஞை பண்ணி என்றது தலையில் வைத்த பூவாடாதே பாதுகாக்கிறேன் என்று சபதஞ்செய்து என்றவாறு அதாவது உன்னை நிழலிலிருத்தி உனக்கொரு கேடும் வராமல் நானே உன் வாயிலைக்காத்து ரக்ஷிக்கிறேன் என்பதாம். தன்னைத் தொழுத கைகளைக் கள்ளிக்காடு சீய்த்தாற்போலே சீய்க்கக்கண்டு என்றது தன்னை வணங்கிய வாணனுடைய ஆயிரங்கைகளையும் கண்ணபிரான் ஆயாசமின்றிக் கள்ளிக்காட்டை வெட்டுவதுபோலத் துணிப்பதைத் தான் கண்கூடாகக் கண்டிருந்தும் என்றவாறு. உயிருண்டாகில் உப்புமாறியுண்ணலாம் என்பது பழமொழி இதன்பொருளாவது.- உயிரோடிருந்தால் உப்புவிற்று உண்டேனும் பிழைக்கலாமென்பதாம். நெற்றியில் கண்ணைப்புதைத்துக்கொண்டு நழுவினன் என்றது நெற்றிக்கண்ணை மறைத்துக்கொண்டு 'வாணன் படுவது படுக' என்று காவலைவிட்டு நழுவிச்சென்றான் என்றவாறு.

வாணன் தோள் துணித்த வரலாறு.— வாணாசுரன் புதல்வியாகிய உஷை யென்பவள் உமாதேவியை நோக்கி எனக்கு நாயகனாயாவான் அவனோடு கூடி இன்புறுவதெப்பொழுது? என்று கேட்டனள். அதற்கு உமை வைகாசி மாதத்தில் சுக்லபக்ஷ த்வாதசியில் கனவில்தோன்றி உன்னோடுகூடி இன்புறுவான் எவனோ அவனையே நீ கணவனாக வரிப்பாய் என்றனள். அதன்படி உஷையானவள் கனவு கண்டு அப்புருஷனிடத்தில் காதல்கொண்டிருந்தனள். பின்னர்க் கண்விழித்து அந்தப் புருஷனைக் காணாமல் 'என் பிராண நாயகனே! நீ எங்கே சென்றாய்' என்று நாணமின்றிச் சொன்னாள். இதனைக்கேட்ட சித்திரலேகை என்ற தோழியானவள் உஷையை நோக்கி நீ யாரை நோக்கி இங்ஙனம் பேசினை? என்று கேட்க, உஷை வெட்கத்தால் பதிலுரைக்காதிருந்தனள். சித்திரலேகை அவளை நோக்கி. 'உனக்குயிர்த்தோழியாயிருக்கிற என்னிடத்தில் உண்மையுரைக்கலாகாதா?' என்று நயந்து கேட்டனள். அதன்மேல் உஷை தனக்கு உமையுரைத்ததையும், அதன்படி கனவு கண்டதையுஞ் சொல்லி 'இனி நான் கண்ட கணவனை எவ்விதத்திலாவது அடையும்படி நீ உபாயஞ்செய்யவேண்டும்' என்று வேண்டினள்.

சித்திரலேகையும் அப்படியே செய்கிறேன் என்று, தேவ கந்தர்வ
அசுரர் முதலானவர்களிலும், மனிதர்களிலும் முக்யமாயுள்ள
யௌவனமுடையவர்களைப் படத்திலெழுதிக்காட்டி 'இவர்களில்
உன் கணவன் யார்?' என்று வினவினள். உஷை படத்திலெழுதப்
பட்டிருக்கின்ற ஆடவர்களைப் பார்த்துக்கொண்டு வருகையில்
அநிருத்தனை மாத்திரம் நன்றாக உற்று நோக்கி நாணமுற்று 'இவன்
தான்; இவன் தான்' என்று மகிழ்ந்து கூறினள். இதனைக்கேட்ட
சித்திரலேகை உஷையை நோக்கி, 'உன்னால் குறிப்பிடப்பட்ட
இவன் கிருஷ்ணனுடைய பேரன்; இவன் அநிருத்தன் என்னும்
பெயரையுடையான்; அழகு வீரம் முதலியவற்றான் சிறந்தவன்;
இவனை நீ கணவனாகப் பெறுவையானால் எல்லாச் செல்வத்தையும்
படைத்தவளாக விளங்குவை; இவனிருக்கின்ற துவாரகாபுரியில்
யாரும் பிரவேசிப்பது அரிது; ஆனாலும் என்னாற் கூடுமானவரை
உன் பிராணநாயகனைக் கொண்டுவருகிறேன்' என்று யோகவித்யா
பலத்தினால் ஆகாயத்தின் வழியாகத் துவாரகை சென்று அநிருத்
தனைக் கொண்டுவந்து அந்தப்புரத்திலவிட, உஷை அவனை நாயக
னாக வரித்து இன்புற்றிருந்தனள்.

இச்செய்தியை ஆங்கிருந்த காவலர்கள் சென்று வாணனுக்
கறிவித்தனர். வாணன் கிங்கரப்படையை ஏவினன். அந்தச் சேனை
அநிருத்தனைத் தாக்க அநிருத்தன் வாசலிலிருந்த தடியையெடுத்துப்
போர் செய்து அந்தச் சேனையை நாசஞ் செய்தான். அதன்மேல்
வாணன் நேரில் வந்து தன்னைத் தாக்கினானும் எதிர்த்துப் போர்செய்து
தோல்வியுற்று தன் மந்திரியை ஏவினன். அவன் மாயையினாற்
போர் செய்து அநிருத்தனை நாகாஸ்திரத்தினாற் கட்டினன்.
இஃதிங்ஙனமிருக்க, துவாரகையில் அநிருத்தனைக் காணாமல் ஆங்
குள்ளாரெல்லாம் தேடி, பாங்குற்றவனே என்று வருத்தமுற்றிருந்
தனர். அப்பொழுது நாரதபகவான் துவாரகாபுரி வந்து அநிருத்
தன் செய்தியை அறிவித்தனர். பின்பு கண்ணபிரான் பெரியதிரு
வடியை (கருடனை) நினைத்தவுடன் அவர் வந்து தோன்றினர். அவர்
மீது கண்ணபிரான் ஆரோகணித்து, பலராமர் பிரத்யும்நர் முதலா
னாருடன் சென்று பாணன் நகராகிய சோணிதபுரத்துக் கெழுந்தருளி
னர். அந்நகர்ப்புறத்தைக் காவல் புரிந்துகொண்டிருக்கும் சிவனு
டைய பூதகணங்கள் வந்தெதிர்த்தன. கண்ணபிரான் அவற்றை
யெல்லாம் சங்கரித்தபிறகு சிவனுடைய ஏவலால் ஜ்வரதேவதை
அக்கினி முதலியவையெல்லாம் எதிர்த்துத் தோல்வியடைந்தன.
பின்னர் சிவனும், கணபதியும், முருகனும் வந்தெதிர்த்தனர்.
கண்ணபிரான் இவர்களையெல்லாம் புறங்காட்டி ஓடும்படி போர்
செய்து வாணனுடைய ஆயிரம் கரங்களையும் சேதித்துக்கொண்டு
வருகிறபோது இரண்டு கரங்கள் மாத்திரம் எஞ்சி நின்ற தருணத்

தில் சிவபிரான் ஓடிவந்து, 'எனக்காக இந்த வாணன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டு'மென்று வேண்டினன். கண்ண பிரானும் அதற்குடன்பட்டு அநிருத்தனை இருக்குமிடம் சென்ற அப்பொழுது கருடனுடைய காற்றுப்பட்டதினால் அவனைக் கட்டியிருந்த நாகபாசம் அகன்றது. அதன்மேல் அநிருத்தனையும் அவன் மனைவியையும் பெரியதிருவடியின்மேலேற்றிக்கொண்டு துவாரகாபுரியடைந்தனன்.

பாதகியாய் என்றது பழியையுடையவனாய் என்றவாறு. லோககுருவாயும், பெற்ற பிதாவாயுமிருக்கின்ற பிர்ம்மாவின் தலையைக் கிள்ளியதினால் பழியுண்டாயிற்று. பிர்ம்மாவின் சிரசைக் கிள்ளிய ஒரு கிருத்யத்தால் இருவகையாலும் பாதகம் பெருகிற்றென்பார் லோககுருவாய்த் தனக்குப் பிதாவான பிர்ம்மாவின் தலையைத் திருகிய பாதகியாய் என்றார். லோககுருவென்ற கருத்தாலும், தன்னைப் பெற்ற பிதாவென்ற எண்ணமுமிருக்குமேல் பிரம்மாவின் தலையைக் கிள்ளுதல் கூடாது. அக்கருத்தையும் சிவனிடத்திலுள்ள தமோகுணம் மறக்கும்படி செய்ததென்பது குறிப்பு. பிரம்மா புலஸ்தியருக்குபதேசிக்க, அவர் தம் சிஷ்யபரசிஷ்யருக்குபதேசிக்க இங்ஙனம் அவ்வுபதேசம் உலகிற் பரவியது. இதனால் லோககுருவாயிருக்குமியல்பு பிர்ம்மாவுக்குண்டென்றறியத்தக்கது.

கூறு செய்த ஊரிலே குறைப்பு செய்து கையுங்கலத்தையுமாய்க்கொண்டு திரிவாரைப்போலே என்றது மனப்பாங்கினால் ஜீவித்தற்காகப் பொருளைப் பங்கிட்டுக்கொடுத்த ஊராரிடத்தில் பொல்லாங்கான செயலைச்செய்து அதனால் கையில் விலங்கிடப்பெற்றுத் திரிவாரைப்போலே என்றவாறு. ஊர் என்பது இங்கு லக்ஷணையாக ஊரிலுள்ளாரை யுணர்த்தியது. உள்ளன்போடு பொருளைப் பங்கிட்டுக்கொடுத்த ஊராரிடத்தில் நன்றி பாராட்டுதலைவிட்டு அவர்கள் விஷயத்தில் அதிக்கிரமச் செயலைச்செய்து 'அடாது செய்வான் படாதுபடுவான்' என்றபடி அவமானமுற்றுத் திரிபவனைப்போல், சிவன், தன்னைப்பெற்றோனென்று நன்றி பாராட்டாமல் அவன்றன் தலையைக்கிள்ளி அதனால் கையிற் கபாலமேந்தி அவமானமுற்றுத் திரிந்தனன். திறந்துகிடந்த வாசல்தோறும் புக்கு என்றது பிர்ம்ம கபாலம் நிறையப் பிச்சையெடுப்பதற்குத் திறந்துகிடந்த வீடுகள் தோறும் புகுந்து என்றவாறு. தன்னை வெளியிட்டுக்கொண்டு திரிவான் ஒருவன் என்றது நான் இன்னபாபஞ் செய்தேனாதலால் இப்படி யானேனென்று தான் பட்டபாட்டைத் தெரிவித்துக் கொண்டு திரிவானொருவன் என்றவாறு. ரக்ஷகனாகமாட்டானென்றது இங்ஙனம் கூறிய ஹேதுக்களால் சிவனும் ரக்ஷகனாகமாட்டானென்றவாறு. "காணிலும் உருப்பொலார் செவிக்கினாதகீர்த்தியார்

(யஎ). இனி அர்த்தம் ரக்ஷகமாமோவென்று நிரூபித்தார் கள்ளர் கொள்ளுதல் காமங்கொள்ளுதல், கோமுற்றவர் கொள்ளுதல், ஜ்ஞாதி கொள்ளுதல், வியாதி கொள்ளுதல், பிறரோடே எதிரிட்டு விஷபக்ஷணம் பண்ணித் தன்னைத்தானே முடித்துக்கொள்ளும்படி பண்ணுதல் செய்கையாலே அர்த்தமும் ரக்ஷகமாகமாட்டாது.

பேணினும் வரந்தருமிடுக்கிலாத்தேவரை ." என்பதும் இங்கறியத்தக்கது. காமனுடைய உடம்பெரிந்தவர் என்பதை விநாயகர் முகத்திலே நெருப்பையுச் சொரிந்தாய்ப்போலே யிருக்க, உடல்பிறவண்ணனுய் மன்பதனால் விளக்கினார். செவிக்கினுத கீர்த்தியார் என்பதை அறுத்தார் பொழிந்துகதை என்றதனுற் குறிப்பிட்டார். மிடுக்கிலாத தேவர் என்பதை நெற்றிக்கண்ணைப் புதைத்து நழுவினவன் என்பதனுல் தெரிவித்தார்.

இதுவரையும் ஆசாரங்களாற்குறிப்பிடப்பெற்ற பிர்ம்ம ருத்ரேந்திராகள் ரக்ஷகமாகமாட்டாரகளென்பதைப் பல காரணங்களால அருளிச்செய்தார். இனி, இம்மையில் எல்லாப் புகழையுந் தருகிற பொருளும் ரக்ஷகமாகமாட்டாதென்பதைத் தெரிவிக்கிறார்.

(யஎ) அர்த்தம் ரக்ஷகமாமோ என்று நிரூபித்தால என்பது பொருள் போலித்தோற்றந்தால் ரக்ஷகம்போலத் தோற்றினுலும், அதன் உண்மையை ஆராய்ந்து பார்த்தால என்றவாறு. கள்ளர் கொள்ளுதல் என்றது திருடர்கள் சமயம்பார்த்து அபகரித்துக்கொள்வாாகளென்றவாறு காமங் கொள்ளுதல் என்றது காமபரவசமுடையவாகள் வேசை முதலானோர்கட்குக் கொடுத்து விரயஞ்செய்வாாகளென்றவாறு. இவாகள பொருளை அழிப்பதற்குக் காமமே காரணமாதலால அதன்மேலேறிட்டுக் காமங்கொள்ளுதல் என்றார். கோமுற்றவா கொள்ளுதல என்றது அரசர்கள் பிறர் மகிழ்ப்புடன் வாழ்வதைக்கண்டு பொறாமைகொண்டு அவர்களபாலுள்ள பொருளை அபகரிப்பார்களென்றவாறு. ஜ்ஞாதிகள கொள்ளுதல் என்றது தாயத்தார்கள் வல்வழக்கிட்டு அபகரித்துக்கொளவார்களென்றவாறு. வியாதி கொளளுதல் என்றது வியாதியுடையவர்கள வியாதியைப் பரிகரிப்பதற்காகப் பொருளை விரயஞ்செய்வார்கள் என்றவாறு. இவர்கள் பொருளையழிப்பதற்கு வியாதியே காரணமாவதால் அதன்மேலேறிட்டு வியாதி கொள்ளுதல் என்றார். பிறரோடே எதிரிட்டு விஷபக்ஷணம் பண்ணித் தன்னைத்தானே முடித்துக்கொள்ளும்படி பண்ணுதல் என்றது அஹங்காரத்தாலே பிறரோடெதிர்த்து அவருக்காற்றாது அவமானமுற்று விஷத்தையுண்டு தன்னுயிரைத்தானே போக்கிக்கொள்ளும்படி செய்யுமென்றவாறு.

பொருள் இம்மையிற் புகழ் முதலிய பெருமையைக்கொடுத்தாலும், அது நிலைபேறின்றிப் பல ஏதுக்களாலும் அழிந்துவிடுமாதலால் ரக்ஷகமாகமாட்டாதெனபது தெளிவு.

(௰௪) ஈசுவரன் மாதாபிதாக்கள்கைவிட்டஅவஸ்தையிலும் "பின்னு நின்றடியேனுக்குற்றனாய் வளர்த்தென் னுயிராகி நின்றான்'' என்கிற படியே தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு தாய்முகங்காட்டியும், இன்சொல் சொல்லியும் பிராதாக்களும் பர்த்தாக்களும் நெகிழ நின்ற வன்று தானேறிட்டுக்கொண்டு கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோயும்,

(௰௫) புருவம் நெரித்தவிடத்திலே தேரை நடத்தியும்,

(௰௪) மாதாபிதாக்கள் கைவிட்ட அவஸ்தையிலும் என்றது மாதாபிதாக்கள் காமபரவசராய் புதல்வர்களைப் பெற்று யௌவன விரோதி என்று கைவிட்டுச் சென்ற நிலைமையிலும் என்றவாறு. *"பின்னுநின் றடியேனுக்குற்றனாய் வளர்த்தென்னுயிராகி நின்றான்" என்பது திருமங்கைமன்னன் அருளிய பாசுரம். தன்னுருக் கெடுத்து வேற்றுருக்கொண்டு என்றது தன்னுருவை மாற்றி விரும்பியவாறு கேற்ற வடிவைக்கொண்டு என்றவாறு. பிராதாக்களும் பர்த்தாக்களும் நெகிழநின்றவன்றும் என்றது உடன்பிறந்தார்களும் கணவன்மார்களும் கைவிட்டகாலத்திலும் என்றவாறு. தானேறிட்டுக்கொண்டு என்றது எவ்வெப்பொழுது எப்படி எப்படி பாதுகாக்கவேண்டுமோ அவ்வப்பொழுது அப்படி அப்படி காத்தற்குரிய காரியங்களை மேற்கொண்டு என்றவாறு. கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோயும் என்றது பாண்டவர்க்காகத் துரியோதனனிடத்தில் தூதனாகச் சென்றும் என்றவாறு. [ஓலை-நிருபம்.] தூது செல்கின்றவன் தூதனுப்பினவனுடைய நிருபத்தைப் பெற்றுக்கொண்டு குறிப்பிட்டவனிடத்திற் கொடுத்தற்குரியவனாவன் அதனை, இங்ஙனம் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோயும் என்று குறிப்பிட்டார். இதனால் கண்ணபிரான் தூதுசென்றதின் ஸௌலப்ய முணர்த்தியவாறு காண்க.

(௰௫) புருவம் நெரித்தவிடத்திலே தேரை நடத்தியும் என்றது ரதியாகிய அர்ச்சுனன் முகத்தைச் சுளித்துக் குறிப்பாகக் காட்டியவிடத்தில் தேரைச் செலுத்தியும் என்றவாறு. யுத்தநடக்கின்ற காலத்தில் ரதியானவன் வாயினால் சொல்வதற்கியலாது சாரதிக்குக் குறிப்பாகக் காட்டுவானாகலால் புருவம் நெரித்தவிடத்திலே என்றார்.

---

* "பெற்றார்பெற்றொழிந்தார்பின்னும்நின்றடியேனுக்
குற்றானாய்வளர்த்தென் னுயிராகிநின்றானை
முற்றாமாமதிகோள்விடுத்தானையெம்மானை
எத்தாலமறக்கேனிதுசொல்லென்னேழைநெஞ்சே''

இதன் பொருளாவது:—மாதாபிதாக்கள் என்னைப்பெற்றுக் கைவிட்டுப் போனார்கள். பின்னும் எனக்கெல்லா உறவுமாய்நின்று வளர்த்து எனது பிராணனாயிருக்குமவனாய். இளம்பருவத்தினனாகிய சந்திரனுடைய க்ஷய ரோகத்தைப் போக்கினவனுமான என ஸ்வாமியை எவ்வகையால் மறப்பேன் இதனை அறிவற்ற மனமே! சொல்வாயாக என்பதாம.

(௨௰) மார்பிலே அம்பேற்றும்,
(௨௧) சாவாமல் நோக்கியும்,
(௨௨) செத்தாரை மீட்டும்,

(௨௰) மார்பிலே அம்பேற்ற வரலாறு:— ஆதிவராகப் பெருமானுக்குப் பூமிப்பிராட்டியாரிடம் பிறந்த நரகாசுரன் புதல்வனாகிய பகதத்தன் பன்னிரண்டாம் நாள் போரில் அர்ச்சுனனோடு கொடிய யுத்தஞ் செய்தான். இவன் ஒருகாலத்தில் இந்திரனுக் குதவியா யிருந்து அரக்கர்களை வெற்றிகொண்டபோது இவனது அரிய செயலிற்கு வியந்து இந்திரன் இவனுக்கொரு வேலாயுதத்தைக் கொடுத்தான். இது, போரில் எதிர்த்துநின்றோர் எவரானாலும் அவரது உயிரை அழிக்கும். நிராயுதபாணிகளை மாத்திரம் ஒன்றுஞ் செய்யாது. இத்தகைய வேலாயுதத்தைப் பகதத்தன் அர்ச்சுனனை நோக்கிப் பிரயோகித்தான். அப்பொழுது கண்ணபிரான் 'இந்த வேல் அர்ச்சுனன் பிராணனைப் போக்கிவிடும்' என்று மிகவும் விரைவாகத் தன் கையிலுள்ள உழவுகோலையுங் கீழே போட்டுவிட்டு வெறுங் கையினனாய் நின்று தன் மார்பை ஏற்றனன். அந்த வேல் ரத்னமாலையாகி, கண்ணபிரான் கழுத்தில் விழுந்தது.

(௨௧) சாவாமல் நோக்கிய வரலாறு:— பாண்டவர்கள் வனவாசம் செய்துகொண்டிருந்த காலத்தில் துரியோதனன் 'இவர்கள் உயிர்பெற்றிருந்தால் பின்னர்த் தாயவுரிமையையுங் கேட்டு இடையூற்றையும் செய்வார்களாதலால் இவர்களை எவ்வாறாவது கொன்றுவிடவேண்டும்' என்று காளமாமுனிவரை வேண்டினன். அவரும் இவன் வேண்டுகோளிற்கிரங்கி ஓர் மாரணயாகஞ் செய்தனர். அந்த யாகத்தில் ஒரு பூதம் தோன்றியது. முனிவர் பாண்டவர்களைக் கொல்லும்படி ஏவினர். இதனையறிந்த கண்ணபிரான், தருமபுத்திரரொழிய மற்ற நால்வரையும் நச்சுப்பொய்கையில் நீரருந்தி மூர்ச்சையுற்றிருக்கும்படி செய்தனன். பூதம் இவர்களைக்கண்டு, 'நம்மை இறந்தவர்மேல் ஏவினன்' என்று கோபங்கொண்டு, ஏவிய காளமா முனிவரைக் கொன்றது. அதன்பிறகு தர்மபுத்திரர் நச்சுப்பொய்கையை யடைந்து ஆங்கிருந்த யக்ஷன் கேட்ட வினாக்களுக்குப் பதிலுரைத்துத் தம்பிமார்களை எழுப்பினர். இதுபோன்ற பல இடையூற்றினின்றும் கண்ணபிரான் பாண்டவர்களைப் பாதுகாத்தனன்.

(௨௨) செத்தாரை மீட்டிய வரலாறு:— கண்ணபிரான் தன் குருவாகிய சாந்தீபனி விருப்பத்தின்படி 'பிரயாக தீர்த்தத்தில் மரணமடைந்த அவரது புதல்வனை யமலோகஞ் சென்று மீட்டிக்கொடுத்தனன். இது நிற்க; தேவகிப் பிராட்டியார் கண்ணபிரானை நோக்கி, 'நீ சாந்தீபனியின் புதல்வனையும் வைதிகன் புத்திரர்களையும் மீட்டிக் கொடுத்ததுபோல என் வயிற்றில் பிறந்த புதல்வர்களையும் மீட்டிக் கொணர்ந்து கொடு' என்றனள். கண்ணபிரான் அதற்குடன்பட்டு,

(௨௩) நாராயணத்வ ப்ரயுக்தமான உதரத்தரிப்பாலே அகவாயிலே நின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகையாலே இவனே எல்லாருக்கும் ரக்ஷகன்

(௨௪) இனி, ஆகிஞ்சந்யமாவது— கர்மஜ்ஞாந பக்திகளிலும், அவற்றுக்கு ஹேதுவான ஆத்ம குணங்களிலும் அந்வயமின்றிக்கே அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலே தான் பூரணனாயிருக்கிற இருப்பையும், தன்னுடைய ஸ்வரூபம் ஸ்வாவப்ரகாரத்தாலும் ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரமாயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து, நங்காரியத்துக்கு நாம் கடவோமல்லோம் என்றிருக்கை.

பாதாளலோகஞ் சென்று மஹாபலியின் ஸம்ஸ்தானத்திலிருந்த அப் புதல்வர்களைக் கொணர்ந்து கொடுத்தவன்.

(௨௩) நாராயணத்வ ப்ரயுக்தமான உதரத்தரிப்பாலே என்றது நாராணத்வத்திற் கியைந்த உலகின்ற ஸம்பந்தத்தாலே என்றவாறு. நாராயணத்வமாவது— சேதநாசேதனங்கட் காதாரமாயிருக்கை. உதரத்தரிப்பு—வயிற்றிற்றாங்குதல். ஸர்வேசுவரன் எல்லாவற்றிற்குங் காரணமாய், தன்வயினின்றும் எல்லாவற்றையும் தோற்றுவிக்கின்றானதலால் நாராயணத்வ ப்ரயுக்தமான உதரத்தரிப்பாலே என்றார். அகவாயிலே நின்று ஸத்தையே நோக்கிக்கொண்டு போருகையாலே என்றது அந்தர்யாமியாயிருந்து உயிர்கள் நிலைபெற்றிருப்பதைக் கருதிக்கொண்டிருப்பதால் என்றவாறு. இவனே எல்லாருக்கும் ரக்ஷகன் என்றது இத்தகைய எம்பெருமானே ஸர்வ ரக்ஷகனாவா னென்றவாறு.

(௨௪) கர்மஜ்ஞாந பக்திகளிலும் என்றது மோக்ஷோபாயமாகச் சாஸ்திரங்களிற் குறிப்பிடப்பெற்ற கர்மஜ்ஞாந பக்திகளிலும் என்றவாறு. அவற்றுக்கு ஹேதுவான ஆத்ம குணங்களிலும் அந்வயமின்றிக்கே என்றது கர்மஜ்ஞாநபக்திகளுக்கு யோக்யதை யுண்டு பண்ணித்தருகிற சமதமாதி ஆத்மகுணங்களில் தனக்குச் சம்பந்தமின்றிக்கே என்றவாறு. அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலே தான் பூரணனாயிருக்கிற இருப்பையும் என்றது ஆத்மகுணங்களாகிய சமதமாதிகட்கு எதிர்த்தட்டான காமக் குரோதாதிகளாலே குறைவற்றவனாயிருக்கிற நிலைமையையும் என்றவாறு. தன்னுடைய ஸ்வரூபம் என்றது ஆத்மாவான தன்னுடைய உண்மையான நிலை என்றவாறு. ஸ்வாவப்ரகாரத்தாலுமென்றது எவ்வகையாலு மென்றவாறு. ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரனாயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து என்றது எம்பெருமானுக்கு மிகவும் வசப்பட்டிருப்பதையும் சிந்தித்து என்றவாறு. நங்காரியத்துக்கு நாம் கடவோமல்லோம் என்றிருக்கை என்றது நம்முடைய காரியஸித்திக்கு நாம் கடமை பூண்டோமல்லோம் என்றவாறு.

(௨௫) இவை இரண்டையுமுடையனாய், ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாலே நிர்ப்பரனாயிருக்கு மவனுக்குச் சரீராவஸாந காலத்திலே ப்ராப்தி அணித்தானவாறே "நயாமி" என்றருளிச்செய்தபடியே ஈசுவரன் தானே சரக்காளாய் வந்து அர்ச்சராதி மார்க்கத்தாலே பரமபதத்தேறக் கொண்டுபோய், நித்யமுக்தரோடே ஒருகோவையாக்கி நித்ய கைங்கர்யத்தையும் கொடுத்தருளும்.

௨௫. இவை இரண்டையு முடையனாய் என்றது ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும் என்ற இரண்டையு முடையவனாய் என்றவாறு. ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாலே நிர்ப்பரனாயிருக்குமவனுக்கு என்றது ஈசுவரனையே சாதனமாகப் பற்றுகையால் ஒரு பாரமுமில்லாத ப்ரபந்நனுக்கு என்றவாறு. சரீராவஸான காலத்திலே பிராப்தியணித்தானவாறே என்றது அந்திம தசையில் அடையத்தக்கபலம் கிட்டியபோது என்றவாறு. 'நயாமி' என்றருளிச் செய்தபடியே என்றது ஸ்ரீ வராகநாயனார் ஸ்ரீ பூமிப் பிராட்டியாருக் கருளிச்செய்த சரம ஸ்லோகத்தின்படியே என்றவாறு. ஈசுவரன் தானே சரக்காளாய் என்றது எம்பெருமான் தானே சரக்கை வஹிக்கின்றவனாய் வந்து என்றவாறு. இங்கு, சரக்கு என்றது ப்ரபந்நனை ஆத்மாவை. ப்ரபந்நனானவன் தன் பலஸித்திக்குத் தானொரு முயற்சியுஞ் செய்யாது எல்லாப் பாரங்களையும் விட்டு அசித்துப்போலப் பாதந்த்ரனாயிருக்கு மியல்பினனாதலால் இவனைச் சரக்கு என்று அசேதனத்தைக் குறிப்பிடுகின்ற சொல்லாற் குறிப்பிட்டார். அர்ச்சிராதி மார்க்கம்—அர்ச்சிஸ் தேவதையை முதலாகவுடைய மார்க்கம். பரமபதத்திற் கொண்டருளுகிற முக்தபுருஷனை ஆசை ஸெம்பாமைன அவ்வழியில் முன்னின்று ஸத்கரிப்பான். நித்யமுக்தர்களோடே ஒரு கோவையாக்கி என்றது நித்ய ஸம்ஸாரியான இவனை நித்ய முக்தர்களிருக்கும் கோஷ்டியிற் கூடியிருக்குமவனாகச் செய்து என்றவாறு. நித்ய கைங்கர்யத்தைக் கொடுத்தருளும் என்றது பரம ப்ரயோஜனமான நித்ய கைங்கர்யத்தைக் கொடுத்து வாழும்படி செய்வான் என்றவாறு.

+ "ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதியோ நர:
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்சமாமஜம்
ததஸ்தம் ம்ரியமாணஞ்ச காஷ்டபாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்"

இதன் பொருளாவது —ஒரு சேதனனது மனதும் சரீரமும் தபாதுக்களும் நல்ல நிலைமையிலிருக்கும்பொழுது அவன் விச்வரூபியாயும் பிறப்பிலியாயுமிருக்கிற என்னை நினைத்துவைத்தால் அவன் முன் சொல்லப்பட்டவைகளால் துன்புறுத்தப்பட்டு ஒரு செயலைச் செய்தற்கும் சக்தனாகாது கட்டையும் கல்லையும்போலப் பரதந்த்ரனாய் மரணமடைகின்ற சமயத்தில் அவன் என்னை நினைக்காவிட்டாலும், முன் நினைத்திருந்த பக்தகோஷ்டியிற் சார்ந்தவனான அவனை நானே நினைத்து எல்லாவற்றிலும் உயர்ந்த கதியை அடைவிப்பேன் என்பதாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கம்பராமாயணம் அரங்கேறியகாலம்.

எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேற்சடையன்வாழ்வு
நண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதைபங்குனியுத்தரத்திற்
கண்ணியவரங்கர்முன்னேகவியரங்கேற்றினனே.

இப்பாடலாலே கம்பநாட்டாழ்வார் சடையப்பவள்ளல் வாசஞ் செய்கின்ற குளிர்ந்த வெண்ணெய்நல்லூரிலேயிருந்து தாம் விளம்பிய இராமாயணத்தை (பெரியோர் காலத்தை யளவிட்டுரைப்பதற்கோர் கருவியாக)க்கருதிய சாலிவாகனசகாப்தம் எண்ணூற்றேழின் மேற் செல்லாநின்ற (அதாவது எண்ணூற்றெட்டாவதான) பராபவஞு பங்குனிமீ 21உ (கி. பி. 886-ஞு பிப்ரவரிமீ 12உ) (கலி 3987) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமியோடு கூடிய உத்திர நட்சத்திரத்தில் தங் குலதெய்வமாகக்கருதிய திருவரங்கம் பெரிய கோயிலிற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் மேட்டழகிய சிங்கப்பெருமாளது சந்நிதிக்கு முன்னேயிருக்கிற (நாதமுனிகள் திருவோலக்கமென்னும்) நாற்கவிவாணர் சபையிலே விஞ்ஞாபனஞ் செய்துகொண்டனரெனத் தெரிகிறது. இப்பாட்டு அரங்கேற்றுக் காலத்துக் கூடவேயிருந்தவோர் பெரியோராலே யருளிச்செய்யப் பட்டதென்ப.

கண்ணியவரங்கர் முன்னேக் கவியரங்கெனப்பாடமாயின் ஸ்ரீவைணவசமயாசார்யர்களுள் அக்கிரகண்ணியராகிய ஸ்ரீமந்நாதமுனிகளை அக்கிராசனாதிபதியாகக்கொண்ட நாற்கவிவாணர் சபையென்க. அரங்கர் முன்னேப்—இடப்பிறவால். ஸ்ரீமந்நாதமுனிகளை ஸ்ரீ

வைணவசமயாசார்ய பரம்பரைக்குக் கூடஸ்தராணையாலே கண்ணிய ரென்பதற்கிவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது. அரங்கர் என்ப தற்கு கண்ணிய என்ற விசேடணத்தாலே திருவரங்கேசராகிய அழ கியமணவாளரென்று பொருள் கூறாது மேட்டழகிய சிங்கரென்று பொருள் கொள்ளப்பட்டது. அரங்கேற்றியவிடம் மேட்டழகிய சிங்கர் சந்நிதியென்று தெரிதலானும், கம்பநாட்டாழ்வார் குலதெய் வமும் உபாசனாமூர்த்தியுமவரே யென்று சரித்திரத்தால் விளங்குத லானுமே யாம். இத்தன்மையான விசேடணங்களைப் பிறிதினியைபு நீக்கிய விசேடண மென்ப. சோழமண்டல சதகத்தாரும் இதனை யநுசரித்து "உண்மையேறுந் திருவரங்கத்தொருவன்" என விசேடித் தார். உண்மையேறுமென்ற விசேடணம் இதனையநுசரித்ததெங்ஙன மெனின்?

"சாணினுமுளனோர்பெற்றியணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக்குன்றினுமுளனின்ற
தூணினுமுளன்முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகனக்கான்"
................................"நின்றவோர்தூணில்வென்றி
"இசைபிறந்தமர்த்தகையாலெற்றினனெற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறச்சிரித்ததுசெங்கட்சீயம்"

என்றபடி "எங்குமுளன் கண்ணனென்னு" மிவ்வுண்மைத்தன் மையை எவருமுணரும்படி வெளிப்படுத்தியது செங்கட்சீயமே யாதலினென்க.

"பங்குனியத்தநாளில்என்று" சில புத்தகங்களிற்காணப்படுவது பிழையேயன்றி நற்பயன்பயக்கும் பாடாந்தரமன்று. இப்பிழை வரு தற்குக் காரணம் சில பழைய ஏட்டுப்பிரதிகளில் பங்குனி யுத்தர நாளிலென் றெழுதப்பட்டிருப்பதைப் பார்த்தெழுதுவோர் பங்குனி யத்த நாளிலென மயங்கி யெழுதியிருக்கிறார்களென்று தோன்று கின்றது. அத்த நாள் ஸ்ரீராமபிரானது திருநக்ஷத்திரத்திற்குப் பொருந்தாத ஏழாவது நாளெனத் தெரிந்தார் இவ்வாறு மயங்கி யெழுதிவையார். உத்தர நாளே எம்பெருமான் திருநக்ஷத்திரமாகிய புநர்பூசத்திற்குப் பொருந்திய சாதகதாரையாதலறிக.

ஸ்ரீமந்நாதமுனிகள்காலத்தே இராமாயண மரங்கேற்றப்பட்டதென்பது பின்வருமவற்றானன்கு விளங்குகின்றது. ஸ்ரீமந்நாதமுனிகள் சில முக்கியமான பிரமாணங்களாலே கலி 3684 கி. பி. 583 சாலி 505-வதான சோபகிருது௵ ஆனிமாசத்தில் திருவவதரித்து 333-௵ லீலாவிபூதியிலெழுந்தருளியிருந்து கலி 4017 கி. பி. 916 சாலி 838-வதான தாது௵ மாசி மாசத்தில் பரமபதித்தருளினாரெனக் காணப்படுகிறதினாலே இராமாயண அரங்கேற்றுக் காலமாகிய கலி 3987 கி. பி, 886 சாலி 808-வதான பராபவ௵ பங்குனி மாதத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு 303-வது திருநக்ஷத்திரம் நடக்கிறதாகத் தெரிதலாலும், ஆழ்வார்களெல்லாந் திருநாடலங்கரித்த மூவாயிரத்துச்சொச்சம் வருஷங்களுக்குப்பின் ஸ்ரீமந்நாதமுனிகள் திருவவதரித்துக் கல்வி கேள்வியறிவொழுக்கங்களாலுயர்ந்து திவ்வியதேச யாத்திரை செய்தருளும்போது ஆராவமுதன் விஷயமான பதிகத்தை வடதேசத்திலிருந்தெழுந்தருளிய இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களநுசந்திக்கக்கேட்டு அவ்வருளிச்செயலாகிய பொய்யில் பாடல்களினர்த்தவிசேஷங்களை பகவத் கிருபையாலே நன்குணர்ந்து அந்த ஸ்வாமிகளைக்கிட்டி இந்தத் திவ்யபிரபந்தம் எங்குளது? ஸ்வாமிகளுக்கு இப்பிரபந்தம் முழுவதும் வருமோவெனக்கேட்க, அவர்கள் 'இப்பத்துப் பாசுரங்களன்றி' வேறொன்றும் நாம் அறியோம்; வேறெவரு மறிந்திருப்பதாகத் தெரியவுமில்லை; இத்திவ்யப்பிரபந்த ஸ்ரீகோசமு மெங்கணாட்டிலெங்குங் காணப்படவுமில்லை. 11-வது பாசுரமாகிய நாமப்பாட்டில் குருகூர்ச்சடகோபன்சொன்னதாகச் சொல்லப்பட்டிருத்தலாலே அத்திருநகரியில் ஒரு வேளை இப்பிரபந்தம் முழுவதும் அகப்பட்டாலும் அகப்படும்; அங்கு எழுந்தருளி விசாரித்தால் தெரியும், என விண்ணப்பஞ் செய்தனர்;

அதனைக்கேட்டங்கெழுந்தருளி அந்நகரியிலெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளை விசாரித்ததில் இங்குமத் திவ்யப்பிரபந்தமில்லை; அதனையத்யயனஞ் செய்திருப்பவர்களுமில்லை; ஆனால் அப்பிரபந்தகர்த்தாவாகிய ஆழ்வார் விஷயமாக மதுரகவிகளருளிச்செய்த பதிகம் மாத்திரம் இங்குள்ளார் சிலருக்குத்தெரியுமென, அதனைத் திருவாய்மலர்ந்தருள்வேணுமென ஒருபெரியாரதனைத் திருவாய்மலர்ந்தருளியதுமன்றி யதன் பிரபாவத்தையு முரைத்தருளக்கேட்டானந்தபரிதராய்

அப்பதிகத்தை யதிகப்பக்தியோடு பன்னீராயிரம் உருஜபித்து, பிரபந்நஜனகூடஸ்தரான நம்மாழ்வாரைப்பிரத்தியட்சீகரித்து அவ்வாழ்வார் தமக்குப் பரமகிருபையாலே சார்த்தமாக வருளிச்செய்த வருளிச்செயல்களுக்குப் பண்ணிசைதாளங்களை யமைத்து மேலையகத்தாழ்வான் கீழையகத்தான் முதலிய அத்யாபகர்களுக்கு அத்யயனம் பண்ணுவித்து அவைகளினின்னின்ன பிரபந்தங்களை இன்னின்ன சமயங்களிலின்னின்னபடி சேவிக்கவேணுமென்று நியமித்ததுமன்றி யவ்வாறு திவ்யதேசம் முதலிய சந்நிதிகளிற் சேவிக்கின்றவர்களுக்கு அந்தந்த திவ்யதேசம் முதலியவைகளுக்கு நிர்வாககர்களாயிருந்த அரசர் முதலியவர்களைக்கொண்டு அந்த அத்யாபகர்களுக்கு அந்தந்த சந்நிதிகளில் மானியங்களும் மரியாதைகளுமேற்படுத்தி, அவை யெப்பொழுதும் நியமமாக நடைபெறும்படி செய்தருளினரென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயமே யாம்.

அந்த ஸ்ரீமந்நாதமுனிகள் கம்பநாட்டாழ்வார் இயற்றிய தனிப்பாடல்களில் "ஊராதொழிநேயன்நான்" என்றமுதனினைப்புடையபாடலைத்திருமங்கையாழ்வாரருளிச்செய்த சிறிய திருமடலினீற்றிலும், "என்னில்லைமையெல்லாம்" என்ற முதனினைப்புடைய பாடலை பெரிய திருமடலினீற்றிலுஞ் சேர்த்து மடல்கள் சேவிக்கும் பொழுதெல்லாஞ் சேவிக்கவேணுமென்றும், தாடகை வதம், அமுதமதனம், இரணியவதம், இராவண வதம் முதலிய சரிதங்களைத் தெரிவிக்கும் பாசுரங்களுக்குத் தம்பிரான்மார்கள் செய்தருளிய வியாக்கியானங்களில் கம்பராமாயணத்துள்ள "சொல்லொக்குங் கடியவேகச்சுடுசரம்" என்ற முதனினைப்புடைய பாடல் முதலிய சில பாடல்களைச் சேர்த்தருளி திருவரங்கம் பெரியகோயிலில் அழகியமணவாளன் கண்டருள்கிற திருவத்யயனோத்சவத்தி லதனை யரையர்கள் சேவிக்கவேணுமென்றும், பிரணயகலக உத்ஸவத்தில் சடகோபரந்தாதியிலுள்ள "அந்தணர்க்கோ" என்ற முதனினைப்புடைய பாடலைச் சேவிக்கவேணுமென்றும், ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய சில திவ்யதேசங்களில் "பொய்ந்நின்றஞானமும்" என்ற முதனினைப்புடைய பாடலைச் சேவிக்க வேண்டிய அவசரத்தில் அநத்யயன காலத்தில் அதற்குப்பதிலாகக் கம்பநாட்டாழ்வாரியற்றிய சடகோபரந்தாதியிலுள்ள "கவிப்பாவமுதமிசையின் கறியொடு கண்ணனுண்ணக் குவிப்

பான்'' என்ற முதனினைப்புடைய பாடலை சந்நிதிப் பரிசாரர்களாகிய தலத்தார் சேவிக்கவேணுமென்றும், ஆழ்வார் திருநகரியிலும் அத்யயனகாலத்தில் ''பொய்ந்நின்ற'' என்ற பாசுரத்துக்குப்பதிலாக மேற்குறித்த சடகோபரந்தாதியிலுள்ள 'கவிப்பாவமுதம்' 'சோாதனை வளவோ' என்ற முதனினைப்புடைய பாடல்களை அரையர்கள் சேவிக்கவேணுமென்றும், அன்றியும் ஆழ்வார் தினந்தோறும் திருவடித் தொழும் உத்ஸவமாகிய சாத்துமுறைக்கு மறுநாள் பதினோராவது உத்ஸவமாகிய வீடுவிடையன்று ஆதிப்பிரான் ஆழ்வார் ஆசார்யர் முதலானவர்களோடு கூடிக் குளிர்ந்திருக்கும் திருவோலக்கத்திலே நம்மாழ்வாருக்குமுன்னே அரையர் கம்பர் இயற்றிய சடகோபரந்தாதி நூறு பாட்டையும் முதலில் சேவித்துப் பின்பு திருப்பாவை வியாக்கியானஞ் சேவிக்கவேணுமென்றும், திருமஞ்சனங் கண்டருளுகின்ற சமயங்களில் இசைபாடுவார் சடகோபரந்தாதியில் முறையே இவ்விரண்டு பாடல் சேவிக்கவேண்டுமென நியமித்தருளியபடி அந்நாள் முதலிந்நாள்வரை யிடையீடின்றி அரையர் முதலியோர் சேவித்துக்கொண்டு வருதலாலும், ஸ்ரீமந்நாதமுனிகள் நியமனப்படி கம்பநாட்டாழ்வார் கட்டுவித்த திருமண்டபங்களில் பெரியகோயிலில் நடைபெறுஞ் சில உற்சவங்களில் திருவீதிப் புறப்பாடாய்ச் சந்நிதிக் கெழுந்தருளும்போதெல்லாம் அழகிய மணவாளனை யெழுந்தருளப்பண்ணித் திருவந்திக்காப்பு இதுகாறும் நடத்திக்கொண்டு வருதலாலும் கம்பநாட்டாழ்வார் ஸ்ரீ ராமாயணத்தை அரங்கேற்றுங் காலையில் அவ்வரங்கில் ஸ்ரீமந்நாதமுனிகள் அக்கிராசனாதிபதியாக வெழுந்தருளியிருந்தனரென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லையென்பர்.

அன்றியும் அரங்கேற்றுக் காலமாகிய கலி 3987, கி. பி. 886 சாலி 808வதான பராபவளூ பங்குனிமாதம் முதல் இகழும் கலி 5029, கி. பி. 1928 சாலி 1850வதான விபவளூ மார்கழி மாதம் வரை சிறிது குறைய ஆயிரத்து நாற்பத்திரண்டு (1042) வருஷங்களாகுகின்றன. பிற்காலத்து ஸ்ரீவைணவாசார்ய பரம்பரை ஸ்ரீமந்நாதமுனிகள் முதற்கொண்டுதான் ஓராண் வழியாய் நடைபெற்று வருகின்றதென்பது ஆஸ்திகரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டதொன்றேயாம்.

ஸ்ரீமந் நாதமுனிகள் முதல் மணவாளமாமுனிகள் வரையுள்ள ஆசார்யவர்யர்களுடைய காலம் அச்சுப் பிரதிகளாகவும் கையெழுத்துப் பிரதிகளாகவுமுள்ள பலவகைப்பட்ட குருபரம்பரை, பெரியதிருமுடியடைவு, பழநடை விளக்கம், கோயிலொழுகு, ஜயந்திமாலை, திவ்யசூரிசரிதம், பிரபந்நாமிருதம, திருவவதார சுலோகம், சரமசுலோகம், முதலிய முக்கியப்பிரமாணங்களாலும், மணவாளமாமுனிகளேற்படுத்திய அட்டதிக்கஜங்களுள் பிரதமபரிகணிதராகிய ஸ்ரீ உப. வே கோயிற் கந்தாடை அண்ணன் வாதூலவரத நாராயணஸ்வாமி, ஸ்ரீ உப. வே. வானமாமலை இராமானுஜஸ்வாமி, இவ்வாசார்யவர்யர்களின் பரம்பரையார்கள் காலம், அப்பரம்பரையார்களிற் சிலர் ஸ்வீகிருதராகவும் ஒருவர்பின்னொருவராக ஆசார்ய பதவியை வகித்தவராகவும் எழுந்தருளியிருந்தார்களாதலாலே அவர்களிற் பலாவதாரகால மறிவதற் கருமையாயிருக்குமெனக்கருதி அவ்வாசார்ய பரம்பரையினர்களுடைய திருமாளிகை, மடம் முதலியவைகளிலவ்வவர்களின் சிஷ்யபரம்பரையினர்களாலே வருடந்தோறுங் கொண்டாடப்படுகிற தீர்த்த தினத்திற் சேவிக்கப்படுமவைகளும் மேற்கூறிய திருமாளிகை, மடம், தனியன் புஸ்தகங்களிற்காணப்படுமவைகளுமாகிய சரமசுலோகங்களாலும் நிச்சயமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றோடு இப்போது எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகளின் திருநக்ஷத்திரங்களையுங் கூட்ட முற்கூறிய தற்கிணங்க இம்மிகூட ஏற்றத் தாழ்வில்லாமல் ஆயிரத்துநாற்பத்திரண்டு வருஷங்களாகின்றன. ஆதலாலும் அரங்கேற்றுக்காலத்து ஸ்ரீமந்நாதமுனிகள் அக்கிராசனாதிபதியாக எழுந்தருளியிருந்தன ரென்ப தெவ்வாற்றானு மறுக்கமுடியாததென்ப தொருதலை.

அரங்கேற்றுக் காலமாகிய ஸ்ரீமந்நாதமுனிகளின் 303வது திருநக்ஷத்திரம் முதல் மேற்குறித்த திருமாளிகை மடத்திலிப்பொழுதிலெழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகளுக்கு நாளிது வரை நிகழாநின்ற திருநக்ஷத்திரம்வரை ஆயிரத்து நாற்பத்திரண்டு வருஷங்களாகுகின்றனவென்பது விளக்கமாக வெழுதப்படுகின்றது.

(1) ஸ்ரீமந்நாதமுனிகள்,

‘‘𑌯𑌾𑌮𑍇𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌤 𑌮𑌾𑌨𑌵𑌤𑍍𑌸𑌰𑌗𑌣𑍇 𑌕𑌾𑌲𑌂 𑌕𑌲𑌿𑌂 𑌶𑍋𑌭
𑌕𑍃𑌦𑍍𑌵𑌪𑍍𑌤𑍇 𑌯𑍁𑌗𑍍𑌮𑌕𑌦𑍇𑌶𑌚 𑌚𑌣𑍍𑌡𑌕𑌿𑌰𑌣𑍇 𑌶𑍀𑌤𑌾𑌂𑌶𑍁 𑌸𑍂𑌨𑍋𑌰𑍍
𑌦𑌿𑌨𑍇, 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇 𑌋𑌕𑍍𑌷𑌵𑌰𑍇𑌚 𑌸𑌂𑌯𑌮𑌿𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌬𑌭𑍂𑌵𑌾
𑌨𑌘𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌿𑌃 𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑌵𑌿𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿𑌸𑍍𑌮𑌸𑌃

‘‘யாமேதேவாதித காநவத்ஸரகணேகாலம் கலிம் சோபக்ருத் வப்தே யுக்மகதேச சண்டகிரணே சிதாம்சு ஸூநோர்திநே, மைத்ரே ருக்ஷவரேச ஸம்யமிவர: ப்ராதுர்ப்பபூவாநக: ஸ்ரீமந்நாதமுநி: பராம்குசகவிம் ஸாக்ஷாத் கரோதிஸ்மஸ:’’

என்கிறபடியே கலி 3684 கி பி 583 சாலி 505 வதான சோபகிருது௵ ஆனி௴ 7௳ திங்கட்கிழமை அநுஷ நக்ஷத்திரத்தில் திருவவதரித்து,

‘‘𑌤𑍍𑌰𑌿𑌶𑌤𑌞𑍍𑌚𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂 𑌭𑍁𑌵𑌸𑍍𑌤𑌲𑍇, 𑌉𑌵𑌾
𑌸𑌨𑌾𑌥𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌯𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌂। 𑌧𑌾𑌤𑍍𑌰𑌬𑍍𑌦𑍇𑌮𑌾𑌘
𑌮𑌾𑌸𑍇𑌤𑍁 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑍇 𑌸𑌯𑍋𑌗𑌿𑌰𑌾𑌟𑍍, 𑌏𑌕𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌾𑌪𑌾
𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂𑌪𑌦𑌂॥

‘‘த்ரிசதஞ்சத்ரயஸ்த்ரிம்சத் வத்ஸராணாம் புவஸ்தலே, உவாஸ நாதயோகீந்த்ரோவர்த்தயந் விஷ்ணு தர்சநம், தாத்ரப்தேமாக மாஸேது சுக்லபக்ஷே ஸயோகிராட், ஏகாதச்யாமவாபார்யஸ்தத் விஷ்ணோ: பரமம்பதம்’’

என்கிறபடியே 333-வது திருநக்ஷத்திரமாகியகலி 4017 கி பி 916 சாலி 838 வதானதாது௵ மாசி௴ 16௳ (பெப்ரவரி௴ 5௳ புதன்கிழமை சுக்ல ஏகாதசியிற் பரமபதித்தருளினர். ஆகலாலே இராமாயணம் அரங்கேற்றியபின்னர் ஸ்ரீமந்நாதமுனிகளெழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 30௵

(2.) உய்யக்கொண்டார் கலி 3867 கி பி 766 சாலி 688 வதானபராபவ௵ சித்திரை௴ 26௳ (ஏப்ரல்௴ 15௳) செவ்வாய்க்கிழமை, சுக்லப்பிரதமை கார்த்திகைநக்ஷத்திரத்தில் திருவவதரித்து 165 வது திருநக்ஷத்திரமாகிய கலி 4032 கிபி 931 சாலி 853 வதான கர௵த்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே ஸ்ரீமந்நாதமுனிகளுக்குப்பின் எழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 15௵

(3) மணக்கால்நம்பி கலி 3932 கிபி 831 சாலி 753 வதான விரோதிகிருது௵ மாசி௴ 29௳ (பிப்ரவரி௴ 18௳), ஞாயிற்றுக் கிழமை சுக்லசதுர்த்தசி மகநக்ஷத்திரத்தில் திருவவதரித்து 165 வது திருநக்ஷத்திரமாகிய கலி 4097 கி பி 996 சாலி 918 வதான துன்முகி௵த்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே உய்யக்கொண்டாருக்குப் பின் எழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 65

(4) ஆளவந்தார்,

𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌤𑌿 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑍇 𑌕𑌲𑍌,
𑌧𑌾𑌤𑍍𑌵𑌬𑍍𑌦𑍇 𑌕𑌰𑍍𑌕𑌟𑍇 𑌮𑌾𑌸𑌿 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌯𑌾𑌂 𑌕𑍁𑌜𑍇 𑌦𑌿𑌨𑍇। 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍇
𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌕𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌭𑌾𑌗𑌤𑌃, 𑌮𑌤𑌿𑌮𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍁𑌨𑍇𑌃
𑌜𑌜𑍍𑌞𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌸𑍁𑌤𑌵𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌹𑌰𑌤𑍍॥

"ஸப்தஸப்ததி ஸம்யுக்தே சதுஸ்ஸாஹஸ்ரிகே கலௌ, தாத்வப்தே கர்க்கடே மாஸி பூர்ணமாயாம் குஜே தினே, விச்வரூபே ரங்கநாயக்யாம் ஸ்ரீஸிஹ்மாஸநபாகத:, மதிமாநீச்வரமுநே: ஜஜ்ஞே கச்சித் ஸுதவரோர்மா ஹாரத்"

என்கிறபடியே கலி 4077 கிபி 976 சாலி 898 வதான தாது௵ ஆடி௴ 20௳ (ஜூலை௴ 13௳) செவ்வாய்க்கிழமை பௌர்ணமி உத்திராட நக்ஷத்திரத்தில் திருவவதரித்து,

𑌏𑌵𑌂 𑌨𑌿𑌵𑌸𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂
𑌯𑍁𑌕𑍍𑌤 𑌷𑌷𑍍𑌟𑌿 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 𑌗𑌤𑌾॥

"ஏவம் நிவஸதஸ்தஸ்ய யாமுநஸ்ய மஹாத்மந:, பஞ்சஸம்யுக்த ஷஷ்டிஸ் துவத்ஸராணும் க்ஷிதௌகதா"

என்கிறபடியே 65 வது திருநக்ஷத்திரமாகிய கலி 4142 கி பி 1041 சாலி 963 வதான விஷு௵த்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே மணக்கால் நம்பிக்குப்பின் எழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 45௵

(5.) பெரிய நம்பிகள் கலி 4098 கி பி 997 சாலி 919 வதான ஹேவிளம்பி௵ மார்கழி௴ 9௳ (டிசம்பர்௴ 2௳) வியாழக்கிழமை அமாவாசை கேட்டை நக்ஷத்திரத்தில் திருவவதரித்து,

𑌕𑌾𑌲𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌿𑌥𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌗𑍁𑌰𑍌।
𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌰𑍍𑌯𑌪𑌦𑌾𑌂𑌭𑍋𑌜 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌯𑌾𑌹𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑌤॥

காளயுக்தாஷ்டகாமத்ய இதிப்ரோக்தா மஹாகுரோ:
யாமுநார்ய பதாம்போஜ சிச்ருஷயா பவத்ததா.

என்கிறபடியே 100வது திருநக்ஷத்திரமாகிய கலி 4198 கி.பி. 1097 சாலி 1019 வதான ஈசுவரஹு மார்கழிமீ 5உ (நவம்பர் 29உ) ஞாயிற்றுக்கிழமை களாஷ்டமியில் பரமபதித்தருளினர். ஆதலால் ஆளவந்தாருக்குப் பின் எழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 56.

(6) எம்பெருமானர் ஸ்ரீஸூக்தி—

𑌕𑌲𑍍𑌯𑌬𑍍𑌦𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌕𑍁𑌮𑍍𑌭𑍇 𑌬𑍁𑌧𑌜𑌨𑌵𑌿𑌦𑌿𑌤𑍇 𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 𑌪𑌿𑌂𑌗𑌲𑌾𑌖𑍍𑌯𑍇, 𑌚𑍈𑌤𑍍𑌰𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌸𑌿𑌤𑍇𑌚 𑌤𑍍𑌰𑌿𑌯𑍁𑌤𑌦𑌶𑌤𑌿𑌥𑍌 𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌹𑌿𑌮𑌾𑌂𑌶𑍌। 𑌪𑌂𑌚𑌮𑍍𑌯𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑌮𑍇𑌤𑍇 𑌸𑍁𑌰𑌗𑍁𑌰𑍁𑌦𑌿𑌵𑌸𑍇 𑌕𑌰𑍍𑌕𑌟𑌾𑌖𑍍𑌯𑍇𑌚 𑌲𑌗𑍍𑌨𑍇, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑌮𑌜𑌨𑌿 𑌨𑌿𑌗𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌮𑍍॥

கல்யப்தே திவ்யகும்பே புதஜனவிதிதே வத்ஸரேபிங்களாக்யே, சைத்ரேமாஸே சுதேச த்ரியுததசதிதே தீப்யமானே ஹிமாம்சௌ, பஞ்சம் யார்த்ரா சமேதே ஸுரகுருதிவஸே கர்கடாக்யேச லக்னே, ஸ்ரீமாந் ராமாநுஜார்யஸ்ஸமஜநி நிகமார்த்தார்த்த ஸம்ரக்ஷணார்த்தம்.

என்கிறபடியே கலி 1118. கி. பி. 1017. சாலி 939வதான பிங்களஹு சித்திரைமீ 13உ (ஏப்ரல்மீ 4உ) வியாழக்கிழமை சுக்ல பஞ்சமி திருவாதிரையோடு கூடின சுபயோக சுபதினத்தில் கர்க்கடக் லக்னத்தில் திருவவதரித்து,

𑌸𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌬𑍍𑌦𑌶𑌤𑌂 𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌵𑌸𑌦𑍍𑌭𑍁𑌵𑌿। 𑌶𑍍𑌯𑌾𑌮𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑍍 𑌯𑌶𑌾𑌕𑌾𑌰𑌂𑌵𑌿𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑍍𑌯𑌚॥ 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌂𑌕𑌨𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌂𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌵𑌾𑌸𑌯𑍇। 𑌪𑍋𑌤𑍀𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌸𑍋𑌮𑍀𑌤 𑌹𑌾𑌵𑌂 * 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌮𑌕॥ 𑌯𑌤𑍀𑌂𑌦𑍍𑌰𑌾𑌧𑌿𑌪𑌃

* திவ்யதேஹஸ்ஸ பாடாந்தரம்

“ஸஷிம்சத் யுத்தரசதம் வத்ஸராணும் புவஸ்தலே, அவ்யாஹத கதிஸ்ஸம்யக் யதாகாமம் விஹ்ருத்யச மாகசுத்த நவம்யாந்து மத் யாஹ்னே மந்தவாஸரே, யோகிராஜஸ் ஸபோகிச பாவம் ஸ்வேபே ஸமப்யகாத்” தர்மோநஷ்ட:- என்கிறபடியே நூற்றிருபதாவது திரு நக்ஷத்திரமாகிய கலி 4238 கி. பி 1137 சாலி 1059வதான பிங்கள ஹூ மாசிமீ 28உ (பிப்ரவரிமீ 19உ) சனிக்கிழமை பரமபதித்தரு ளினர். ஆதலாலே பெரியநம்பிகளுக்குப்பின் னெழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 40.

(7) எம்பார்கலி 4126, கி. பி. 1025 சாலி 947 குரோதன ஹூ தைமீ 13உ (ஜனவரிமீ 5உ) புதன் கிழமை பௌர்ணமி பூச நக்ஷத்திரத்தில் திருவவதரித்து, நூற்றுப்பதினைந்தாவது திருநக்ஷத் திரமாகிய கலி 4241. கி. பி. 1140 சாலி 1062வதான ரௌத்திரி ஹூத்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே எம்பெருமானர்க்குப் பின் எழுந்தருளியிருந்தஹூ 3.

(8) பட்டர், கலி. 4223. கி. பி. 1122 சாலி 1044 வதான சுபகிருதுஹூ வைகாசிமீ 29உ (மேமீ 23உ) திங்கட் கிழமை பௌர்ணமி அனுஷ நக்ஷத்திரத்தில் திருவவதரித்து, இருபத்தெட் டாவது திருநக்ஷத்திரமாகிய கலி 1251. கி. பி. 1150. சாலி 1072 வதான பிரமோதூத ஹூத்தில் பரமபதித்தருளினர், ஆதலாலே எம்பாருக்குப்பின் எழுந்தருளியிருந்த ஹூ 10.

(9) நஞ்சீயர் கலி 4214. கி. பி. 1113. சாலி 1035வதான விஜயஹூ பங்குனிமீ 1உ (பிப்ரவரிமீ 22உ) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண பிரதமை உத்திர நக்ஷத்திரத்தில் திருவவதரித்து, 105 வது திருநக்ஷத்திரமாகிய கலி 4319 கி.பி. 1218 சாலி 1140வதான பகுதானி ஹூத்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே பட்டருக்குப் பின் எழுந்தருளியிருந்த ஹூ 68.

(10) நம்பிள்ளை கலி. 4248 கி. பி 1147 சாலி 1069வதான பிரபவஹூ கார்த்திகைமீ 13உ (நவம்பர்மீ 9உ) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி கார்த்திகை நக்ஷத்திரத்தில் திருவவதரித்து, 105வது

திருநக்ஷத்திரமாகிய கலி 4353 கி. பி. 1252 சாலி 1174 வதான பரீதாபிவருஷத்தில் பரமபதித்தருளினா. ஆதலாலே நஞ்சீயருக்குப் பின் எழுந்தருளியிருந்தவருஷம் 34.

(11) வடக்குத்திருவீதிப்பிள்ளை கலி 4328 கி. பி. 1227 சாலி 1149வதான சர்வஜித்வருஷம் ஆனிமீ 30உ (ஜுன்மீ 25உ) வெள்ளிக்கிழமை சுக்லதசமி சுவாதி நக்ஷத்திரத்தில் திருவவதரித்து, 97வது திருநக்ஷத்திரமாகிய கலி 4425 கி. பி. 1324 சாலி 1246 வதான ரக்தாக்ஷி வருஷத்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே நம்பிள்ளைக்குப்பின் எழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 72.

(12) பிள்ளைலோகாசாரியர், கலி 4366 கி. பி. 1265 சாலி 1187 வதான குரோதனவருஷம் ஐப்பசிமீ 21உ (அக்டோபர்மீ 18உ) ஞாயிற்றுக்கிழமை சுக்லாஷ்டமி திருவோணத்தில் திருவவதரித்து, 108வது திருநக்ஷத்திரமாகிய கலி 4474 கி. பி. 1373 சாலி 1295 வதான பிரமாதீசவருஷத்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே வடக்குத்திருவீதிப்பிள்ளைக்குப்பின் எழுந்தருளியிருந்த வருஷம் 49.

(13) திருவாய்மொழிப்பிள்ளை கலி 4429 கி. பி. 1328 சாலி 1250வதான விபவவருஷம் வைகாசிமீ 28உ (மேமீ 22உ) ஞாயிற்றுக்கிழமை சுக்லத்திரயோதசியில் விசாகநக்ஷத்திரத்தில் திருவவதரித்து, 105வது திருநக்ஷத்திரமாகிய கலி 4534 கி.பி. 1433 சாலி 1355வதான பிரமாதீச வருஷத்தில் பரமபதித்தருளினர். ஆதலாலே பிள்ளைலோகாசார்யருக்குப் பின் எழுந்தருளியிருந்த வருஷம் 60.

(14) மணவாள மாமுனிகள்,

வர்ஷேஸாவம் ஶதாயாம் கலியுகஶரதாம் ஸாரயேஶகா ப்தே, வஷேஷு வஸாரணாஶ்வ ஸமிதகதலேவாஸரே தீர ஸம்ஶ்வு। வாரே ஶ்ரேஜவேஷுதாஞ்சுபூஸ் ஜநிஸுரோ ஶஶீ க்ஷூல க்ஷ ஸாகநேபூ, ஸ்ராஜநுமூலவாஶ்வதாரே யதிவநந்வரோ ரூஜ்ஜாஜாதரயோதீ॥

பாஶோபாவம் சதாயாம் கலியுகசரதிஸ் ஸ்ருத்தாயே சகாப் தே,வர்ஷேஸதாரணாக்யே ஸமதிகதநிலே வாஸரேதீரவ்ஸக்யே, வா

ரேஜைநேவ சதுர்த்யாம் ஸமஜநிலஸிதே சுக்லபக்ஷே ஸுகர்மா,
ப்ராஜந்மூலாக்யதாரே யதிபதிரபரோரம்யஜாமாத்ருயோகீ.

என்கிறபடியே கலி 4471 கி. பி. 1370 சாலி 1292வதான சாதாரண௵ ஐப்பசிமீ 26உ (அக்டோபர்மீ 24உ) வியாழக் கிழமை சுக்ல சதுர்த்தி திருமூல நக்ஷத்திரத்தில் திருவவதரித்து,

ஸாகெஶெஷஞெய மதெசவ ருயிரொாக்காரூாவ்ரு ஸம்வ ஜ்ஸரெ, கும்ஷம்ஸாஸ்வதி யாதிதக் ஸுதநிநெவக்ஷ வஜ க்ஷெதரெ। த்வாஜஶ்யாம் ஶ்ரவணக்ஷயொமஹிதெ ஶ்லா ஞெ்தநெஸத்குண ஸ்ரீவெகுண்டீகுண்டெ வெஹவமோஜ் ஸௌம்யொபயந்தாமுநி:॥

சாகேசேஷலயே கதேச ருதிரோத்கார்யாக்ய ஸம்வத்ஸரே, கும்பம்பாஸ்வதி யாதிதத் ஸுததிநே பக்ஷேவளர்க்ஷேதரே, த்வாதச்யாம் ச்ரவணர்க்ஷயோகமஹிதே ச்லாக்யேதிநே ஸத்குண ஸ்ரீவைகுண்டமகுண்ட வைபவமகாத் ஸௌம்யோபயந்தாமுநி:

என்கிறபடியே 74வது திருநக்ஷத்திரமாகிய கலி 4545 கி. பி. 1444 சாலி 1366வதான ருதிரோத்காரி௵ மார்கழிமீ புதன் கிழமை கிருஷ்ணத்துவாதசியில் பரமபதித்தருளினர், ஆதலாலே திருவாய்மொழிப்பிள்ளைக்குப்பின் னெழுந்தருளியிருந்த திருநக்ஷத்திரம் 11.

மேற்கூறியபடி அரங்கேற்றுக்காலத்து அக்ரொசனுதிபதியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீமந் நாதமுனிகள் முதல் மணவாளமாமுனிகள் வரை பதினன்கு ஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்த ௵கள் 558.

(1) மணவாள மாமுனிகள் நியமித்த அஷ்டதிக்கஜங்களுட் பிரதமபரிகணிதராயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வாதுலவாத நாராயண தேசிகனென்னும் ஸ்ரீ உ. வே. பெரியகோயிற் கந்தாடையண்ணன் ஸ்வாமி கலி 4491 கி. பி. 1390 சாலி 1312வதான சுக்ல௵ புரட்டாசிமீத்தில் திருவவதரித்து,

𑌵𑌿𑌭𑌵𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑍇 𑌚𑍈𑌤𑍍𑌰𑌕𑍇 𑌗𑍁𑌰𑍁𑌦𑌿𑌨𑍇 𑌮𑍇𑌷𑌕𑍇 𑌸𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌤𑌿𑌥𑍌। 𑌵𑌿𑌮𑌲𑍀𑌶𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌃 𑌪𑌾𑌦𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌯𑌯𑍌, 𑌵𑌰𑌦𑌨𑌾𑌰𑌦 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑌿𑌗𑍍𑌗𑌜𑌾𑌧𑍀𑌶𑍍𑌵𑌰𑌃॥

’ விபவஸம்வத்ஸரே விஷ்ணுபே சைத்ரகே குருதினே மேசகே ஸத்ருதீயாதிதௌ, விமலதீஸ்தத்குரோ: பாதயுக்மம்யயௌ வரத நாரத நாராயணோதிக்கஜாச்ரேஸ்வர:

என்கிறபடியே 59வது நக்ஷத்திரமாகிய கலி 4550 கி.பி. 1449 சாலி 1371வதான விபவஹு சித்திரைமீ சுக்ல திருதியையில் பரம பதித்தருளினர். ஆதலாலே மணவாளமாமுனிகள் பரமபதித்தரு ளியதன்பின் எழுந்தருளியிருந்தவ௵ 5.

(2) ஸ்ரீ உ. வே. கோயிற்கந்தாடைநாதன் ஸ்வாமி பரமபதித் தது கலி 4568 கி. பி. 1467 சாலி 1389வதான வியஹு மார்கழிமீ கிருஷ்ணத்துவாதசியாதலாலே பெரியகோயிற் கந்தாடையண்ணன் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவ௵ 18.

(3) “கோயிலண்ணன் ஸ்வாமி பரமபதித்தது கலி 4607 கி. பி. 1506 சாலி 1428வதான பார்த்திபஹு பங்குனிமீ கிருஷ்ண நவமி ஆதலாலே கோயிற்கந்தாடைநாயன் ஸ்வாமிக்குப் பின்னெழுந் தருளியிருந்தவ௵ 39.

(4) குமாரக்கந்தாடையப்பன்ஸ்வாமி பரமபதித்தது கலி 4629. கி.பி. 1528 சாலி 1450வதான பிலவஹுமார்கழிமீ கிருஷ்ண சதுர்த்தசியாதலாலே கோயிலண்ணன்ஸ்வாமிக்குப் பின்னெழுந் தருளியிருந்தவ௵ 22.

(5) பெரியகந்தாடையண்ணன்ஸ்வாமி பரமபதித்தது கலி 4687 கி. பி. 1586 சாலி 1508 வதான விசுவாவசுஹு மார்கழிமீ சுக்ல தசமியாதலில் குமாரக்கந்தாடையப்பன்ஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தவ௵ 58.

(6) குமாரக்கந்தாடையண்ணன் ஸ்வாமி பரமபதித்தது கலி 4711 கி. பி. 1610 சாலி 1532வதான சுக்கிலஹு மார்கழிமீ சுக்ல

துவாதசியாதலாலே பெரியகந்தாடையண்ணன்ஸ்வாமிக்குப் பின்னெழுந்தருளியிருந்தது 24.

(7) வேடலப்பையண்ணன் ஸ்வாமி பரமபதித்தது கலி 4740 கி. பி. 1639 சாலி 1561வதான விளம்பிஞு கார்த்திகைமீ சுக்ல சதுர்த்தசியாதலாலே குமாரக்கந்தாடையண்ணன் ஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தது 29.

(8) கந்தாடையப்பன்ஸ்வாமி பரம பதித்தது கலி 4759 கி. பி. 1658 சாலி 1580வதான பிங்களஞு ஆடிமீ பௌர்ணமியாதலாலே வேடலப்பையண்ணன் ஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தது 19

(9) கந்தாடையண்ணன் ஸ்வாமி பரமபதித்தது கலி 4789 கி. பி. 1688 சாலி 1610வதான சர்வஜித்ஞு வைகாசிமீ கிருஷ்ணபஞ்சமியாதலே கந்தாடையப்பன்ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 30

(10) குமாரக்கந்தாடையண்ணன் ஸ்வாமி II பரமபதித்தது கலி 4831 கி. பி 1730 சாலி 1652வதான சுக்லஞு ஆவணிமீ சுகல திரயோதசியோதலாலேகந்தாடையண்ணன்ஸ்வாமிக்குப்பின்னெழுந்தருளி யிருந்தது 42

(11) ஸ்ரீரங்காசாரியார் ஸ்வாமி I பரமபதித்தது கலி 4850 கிபி 1750 சாலி 1672வதான விரோதிஞு மார்கழிமீ கிருஷ்ண பஞ்சமி யாதலே குமாரக்கந்தாடையண்ணன் ஸ்வாமி II-க்குப்பின் எழுந்தருளி யிருந்தது 20

(12) பெரியஸ்வாமியண்ணன்ஸ்வாமி பரம பதித்தது கலி4897 கி. பி. 1796 சாலி 1718வதான யுவஞு மார்க்கழிமீ சுக்லத்துவாதசி யாதலாலே சிரங்காசாரியார்க்குப், பின் எழுந்தருளியிருந்தது 46

(13) சிரங்காசாரியார்ஸ்வாமி II பரமபதித்தது கலி 4899 கி பி. 1798 சாலி 1720வதான ஈசுவரஞு மார்கழிமீ கிருஷ்ணத்

திருதியை யாதலாலே பெரியஸ்வாமியண்ணன் ஸ்வாமிக்குப் பின் எழுந்தருளி யிருந்த வரு 2.

(14) குமார அண்ணன் ஸ்வாமி பரமபதித்தது கலி 4932 கி. பி. 1831 சாலி 1753வதான சாதாரணவரு ஆவணிமீ சுக்லதசமி யாதலாலே சிரங்காசாரியார்க்குப்பின் எழுந்தருளியிருந்தவரு33.

(15)சிரங்காசாரியார்ஸ்வாமி III பரமபதித்தது கலி4973 கி.பி. 1872 சாலி 1794வதான கரவரு ஐப்பசிமீ சுக்லத்துதியையாத லால் குமாரஅண்ணன்ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவரு 41

(16) வரதாசார்யார் ஸ்வாமி பரமபதித்தது கலி 4993 கி. பி. 1892 சாலி 1814வதான பரீதாபிவரு ஆனிமீ சுக்லாஷ்டமியாத லாலே சிரங்காசார்யஸ்வாமி IIIக்குப்பின் எழுந்தருளியிருந்தவரு20

(17) இப்போது எழுந்தருளியிருக்கிறஸ்ரீரங்காசார்யர் ஸ்வா மிக்கு வர்த்தமான கலி 5029 கி.பி. 1928 சாலி 1850வதான விபவரு மார்கழிமீ வரை சென்ற திருநக்ஷத்திரம் பதினாறுதலால் வரதாசாரியருக்குப்பின் செல்லாநின்றவரு 16.

ஆக. 1-வது பெரிய கோயிற்கந்தாடையண்ணன் ஸ்வாமி முதல் ஈாளிதுவரையாயிருக்கிறவரு 484 காண்க.

மேற்குறித்த அட்டதிக்கயங்களுள் அக்கிரகண்ணிய ராயெழுந்தருளியிருந்த ஸ்ரீ உப. வே. வானமாமலை இராமாநுஜஸ்வாமி குருபரம்பரையினர்களுடைய கால நிர்ணயம்.

1-வது ஸ்ரீ உ. ப. வே. வானமாமலை இராமாநுஜஸ்வாமி பரம பதித்தது கலி 4584 கி. பி. 1483 சாலி 1405 வதான சோபகிருது வரு ஆடிமீ சுக்லத்திரயோதசியாதலே மணவாளமாமுனிகளுக்குப் பின் எழுந்தருளியிருந்த வரு 39.

(2) களத்தூர்வாத முனிஸ்வாமி பரமபதித்தது கலி4603 கி.பி 1502 சாலி 1424வதான துந்துபிவரு ஆடிமீ சுக்லப்பிரதமை ஆத லால் இராமாநுஜஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவரு 19.

(3) செண்டலங்கார ஸ்வாமி பரமபதித்தது கலி 4621 கி. பி, 1520 சாலி 1442 வதான விக்கிரமவூடு மாசிமீ கிருஷ்ணநவமியர்தலாலே களமூர் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவூடு 18.

(4) அனைத்தழகுங்கண்ட ரங்கப்ப ஸ்வாமி பரமபதித்தது கலி 4627 கி. பி. 1526 சாலி 1448வதான விய வூடு ஆனிமீ சுக்ல சதுர்தசியாதலாலே செண்டலங்கார ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவூடு 6.

(5) திம்மப்பய்யங்கார் ஸ்வாமி பரமபதித்தது கலி 4645 கி. பி. 1544 சாலி 1466 வதான குரோதனவூடு தைமீ சுக்லதிருதியையாதலாலே அனைத்தழகுங்கண்ட ரங்கப்பஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவூடு 18.

(6) எம்பெருமானார் ஸ்வாமி பரமபதித்தது கலி 4700 கி.பி 1599 சாலி 1521 வதான விகாரிவூடு ஆடிமீ கிருஷ்ண சத்தமியாதலாலே திம்மப்பய்யங்கார் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவூடு 55.

(7) பெரிய திருவேங்கடஸ்வாமி பரமபதித்தது கலி 4708 கி பி 1607 சாலி 1529வதான பிலவங்கவூடு தைமீ சுக்லநவமியாதலாலே எம்பெருமானார் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்த வூடு8.

(8) கோனப்பய்யங்கார்ஸ்வாமி பரமபதித்தது கலி 4718 கி பி 1617 சாலி 1539வதான பிங்களவூடு பங்குனிமீ சுக்ல ஏகாதசியாதலால் பெரிய திருவேங்கடஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்த வூடு 10.

(9) இரங்கப்பய்யங்கார் ஸ்வாமி பரமபதித்தது கலி 4738 கி பி 1637 சாலி 1559வதான ஈசுவரவூடு ஆனிமீ சுக்ல தசமி ஆதலால் கோனப்பய்யங்கார்ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவூடு 20.

(10) நடுத்திருவேங்கடஸ்வாமி பரமபதித்தது கலி 4741 கி பி 1640 சாலி 1562 வதான விக்ரமவூடு ஆடிமீ அமாவாசை

ஆதலாலே இரங்கப்பய்யங்கார் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்த வருஷம் 3.

(11) பெரியதெய்வநாயகஸ்வாமி பரமபதித்தது கலி 4773. கி. பி 1672 சாலி 1594வதான பரீதாபிவருஷசித்திரைமீ கிருஷ்ணாட்டமி ஆதலாலே நடுதிருவேங்கடஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தவருஷம் 32.

(12) சின்னத் திருவேங்கடஸ்வாமி பரமபதித்தது கலி 4798 கி. பி. 1697 சாலி 1619 வதான ஈசுவரவருஷ சித்திரைமீ கிருஷ்ண பஞ்சமியாதலாலே பெரிய தெய்வநாயக ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவருஷம் 25.

(13) சின்ன தெய்வநாயக ஸ்வாமி பரமபதித்தது கலி 4801 கி. பி 1700 சாலி 1622வதான விக்கிரமவருஷ ஐப்பசிமீ கிருஷ்ண சதுர்த்தி ஆதலாலே சின்னத்திருவேங்கடஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவருஷம் 3.

(14) கூரத்தாழ்வான் ஸ்வாமி பரமபதித்தது கலி4813 கி. பி 1712 சாலி 1634 வதான நந்தனவருஷ சுக்கில நவமி ஆகலாலே சின்னதெய்வநாயக ஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தவருஷம் 12.

(15) ஸ்ரீவத்ஸசின்னஸ்வாமி பரமபதித்தது கலி 4823 கி. பி 1722 சாலி 1644வதான சுபகிருதுவருஷ ஆடிமீ சுக்கில ஷஷ்டி ஆகலாலே கூரத்தாழ்வான் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தவருஷம் 10.

(16) திருநகரி திருவேங்கடஸ்வாமி பரமபதித்தது கலி 4842 கி. பி 1741 சாலி 1663வதான துன்மதிவருஷ ஆனிமீ கிருஷ்ண பஞ்சமி ஆகலாலே ஸ்ரீவத்ஸசின்னஸ்வாமிக்குப்பின எழுந்தருளியிருந்தவருஷம் 19.

(17) கோயில் திருவேங்கடஸ்வாமி பரமபதித்தது கலி 4854 கி. பி 1753 சாலி 1675 வதான ஸ்ரீமுகவருஷ தைமீ சுக்லத்விதியை ஆதலாலே திருநகரி திருவேங்கடஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தவருஷம் 12.

(18) பெரிய சடகோப ராமாநுஜஸ்வாமி பரமபதித்தது கலி 4884 கி. பி 1783 சாலி 1705 வதான சோபகிருதுவு வைகாசிமீ கிருஷ்ணத் விதியையாதலாலே கோயில் திருவேங்கடஸ்வாமிக்குப் பின் எழுந்தருளியிருந்தது 30.

(19) பெரியபட்டர்பிரான் ஸ்வாமி பரமபதித்தது கலி4920 கி. பி 1819 சாலி 1741 வதான பிரமாதிவு கார்த்திகைமீ சுக்ல சதுர்த்தசியாதலாலே பெரிய சடகோபராமாநுஜஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 36.

(20) கலியன் இராமாநுஜஸ்வாமி பரமபதித்தது கலி 4968 கி. பி 1867 சாலி 1789வதான பிரபவவு ஆனிமீ கிருஷ்ணத் துதியையாதலாலே பெரிய பட்டர்பிரான் ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 48

(21) மதுரகவி இராமாநுஜஸ்வாமி பரமபதித்தது கலி 4975 கி. பி 1874 சாலி 1796வதான பவவு பங்குனிமீ சுக்லசதுர்த்தசி ஆதலாலே கலியன் இராமாநுஜஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 7.

(22) யோகி இராமாநுஜஸ்வாமி பரமபதித்தது கலி 4984 கி. பி 1833 சாலி 1805வதான சுபானுவு மார்கழிமீ கிருஷ்ண ஏகாதசியாதலாலே மதுரகவி இராமாநுஜஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 9.

(23) சின்ன சடகோப ராமாநுஜ்ஸ்வாமி பரமபதித்தது கலி 4997 கி. பி 1896 சாலி 1818வதான துன்முகிவு வைகாசிமீ பௌர்ணமி ஆதலாலே யோகி இராமாநுஜஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 13.

(24) சின்னபட்டர்பிரான் ஸ்வாமி பரமபதித்தது கலி 5005 கி. பி 1904 சாலி 1826 குரோதிவு மாசிமீ கிருஷ்ண சதுர்த்தசி ஆதலாலே சின்ன சடகோபராமாநுஜ ஸ்வாமிக்குப்பின் எழுந்தருளியிருந்தது 8.

(25) இப்போது எழுந்தருளியிருக்கின்ற சின்னகலியன் இராமாநுஜஸ்வாமிக்கு வர்த்தமான கலி 5029 கி. பி 1928 சாலி 1850 வதான விபவஞு மார்கழிமீ வரை சென்ற திருநக்ஷத்திரம் 24 ஆதலால் சின்னபட்டர்பிரான் ஸ்வாமிக்குப் பின் செல்லாநின்ற திருநக்ஷத்திரம் 25 ஆதலால் சின்னபட்டர்பிரான் ஸ்வாமிக்குப் பின் செல்லாநின்றவஞு 24.

ஆக 1வது வானமாமலை இராமாநுஜஸ்வாமி முதல் நாளிது வரை ஆயிருக்கிற வஞுகள் 484 ஆதல் காண்க.

இவ்விரண்டு ஆசார்ய பரம்பரையினர் காலமும் சிறிதுங் கூடுதல் குறைதலன்றி ஒன்றுபோலவே யிருப்பதை யுற்றுநோக்கி யுணர்க. இவ்வட்டதிக்கஜங்களுள் மற்றுஞ்சில ஆசார்யபரமபரையிலுள்ளவர்கள் காலமுமேற்றத் தாழ்வின்றி முற்கூறியபடி சரியாக வேயிருக்கிறது. அவற்றையுமெழுதப்புகின் மிகவிரிவாகுமென்றஞ்சியும் முற்கூறியவைகளை மதிநுட்ப நூலோருடையார்க்குப் போதுமானசான்றுகளாகுமென்று துணிந்தும இங்கெழுதாது விடுத்தனம இராமாயண வரங்கேறுக்காலமாகிய சாலி சகாப்தம் 808 வதான பராபவஞு பங்குனிமீ முதல் நாளிது சாலிவாகன சகாப்தம் 1850வதான விபவஞு மார்கழிமீ வரை ஆயிரத்து நாற்பத்திரண்டுவஞு ஆயினறபோல அந்த அரங்கேற்றுக் காலத்து அக்கிராசனுதிபதியாகவிருந்த ஸ்ரீமந்நாதமுனிகள் முதல் மணவாள மாமுனிகள் வரை 14 ஆசார்யவர்யர்கள் காலம. 558.

கோயிலண்ணன் ஸ்வாமி வானமாமலை ஸ்வாமி ஆசார்ய பரம்பரையிலுள்ள காலம். (484)

ஆக ஆயிரத்து நாற்பத்திரண்டு வஞுகள் ஒன்றுபோல ஒத்திருத்தலுணரத்தக்கது.

யாழ்ப்பாணத்து மானிப்பாய்முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் லோகோபகாரமாக வெழுதிச்சிட்டு வெளிப்படுத்திய தமிழ்மொழி வரலாற்றில் கம்ப நாடர் இராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில்அரங்கேற்றுங்காலையிலவ்வரங்கிலுடனிருந்து கேட்டவர் ஸ்ரீவைணவாசாரியா

ராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் அவர்க்குப்பின் ஆசார்ய பரம்பரையாக வந்தோர் இப்பொழுதிருப்பவரை யுள்ளிட்டு நாற்பத்துமூவராவர். அவர் ஒவ்வொருவருக்கும் இருபத்தைந்து வருடமாக வைத்துத் தொகை செய்யினும் ஆயிரத்தெழுபத்தைந்து வருடங்களாகும். எவ்வழியானும் "எண்ணிய சகாத்தமெண்ணூற்றேழின்மேல்" என்ற அரங்கேற்றுக்காலம் கூறுஞ்செய்யுள் வலிந்து பொருள் கொள்ளும் படியிழுக்குடையதாக வாகமாட்டாதென்பர். இவர் தெரிந்துகொண்ட ஆசார்ய பரம்பரையாதோ நமக்கு நன்கு புலப்படவில்லை.

திருவனந்தபுரம் மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்ரீமான் கே ஜீ. சேஷய்யரவர்கள் மேற்கூறிய திருவனந்தபுரம் இராஜகீய ஆர்ட்ஸ்கலாசாலைத் தமிழ்ச்சங்கத்தின் பிரதம மேளனத்தில் சபாநாயகராக விருந்துசெய்த பிரசங்கத்தில் கம்பர் காலத்தை நிர்ணயிக்கும் பிரகரணத்தில்,

"கம்பர் காலத்தை நிர்ணயிக்க அவர்பாடிய விராமாயணத்துளொன்று சான்றாகக் காணப்படவில்லை. ஆயினும் இராமாயணத்தைச் சிறப்பித்துக் கூறுங்கவியொன்றில் காலங்குறிக்கப்பட்டிருக்கிறது. அக்கவி "எண்ணிய சகாத்தமெண்ணூற்றேழின மேல்...கவியரங்கேற்றினனே" என்பது. இச்செய்யுளால் கம்பரியற்றிய இராமாயணம் ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் சகம் எண்ணூற்றேழின்மேல் அரங்கேற்றப்பட்டது என்று விளங்குகிறது. இதற்கு நேரான ஆங்கில ஹூ 885வது ஹூத்துக்கு மேலான ஹூ ஆகும். இதைப்புறக்கணிக்க நான் ஒரு காரணமுங்காணவில்லை. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் தலைமை வகித்த வித்வத்சபையில் இராமாயணம் அரங்கேற்றப் பெற்றதாகவும் கவியின பெருமையை நோக்கி ஸ்ரீவைஷ்ணவாசாரியார் கவிச்சக்கிரவர்த்தி, தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் என்று கம்பநாடருக்குப் புகழ் நாமஞ்சூட்டியதாகவும் பிரசித்தமான கர்ணபரம்பரையுமுளது. ஆசார்ய பரம்பரையில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஆறாவது பரம்பரையினராக இராமாநுஜாசாரியார் கருதப்படுகிறார். ஸ்ரீராமாநுஜாசாரியார் காலம் கி. பி 11 நூற்றாண்டின் முற்பாதியென்பர் ஆகவே ஸ்ரீமந்நாதமுனிகள் காலம் 9வது நூற்றாண்டென்று கொள்ளலாம். இராமாயணம் அரங்கேறுங்காலமாகச்

சொல்லப்படும். கி. பி 886ஆம் மும், ஸ்ரீமந்நாதமுனிகள் காலமு மொத்துவரும்."

"கொல்லிமலை நாடாளுங் கொற்றவா" என்று கம்பநாடர் சோழனைப் பாடியபாடல், தனிப்பாடலிலுளதாகப் பெரியோர் கூறுவர். கொல்லிமலை கொங்குநாட்டைச் சேர்ந்தது. சோழன் கொங்கு நாட்டை வென்றதற்கணித்தாக இச்செய்யுள் பாடப்பட்டிருக்கவேண்டும். கொங்குநாடுவென்ற சோழன் விஜயாலயன் மகன் ஆதித்தகுலோத்துங்கசோழஇராஜகேசரிவன்மனென்ப"

இவன் காலத்தோடும் கி. பி. 885-க்கு மேலென்படுதோத்திருக்கிறது.

இக்காலம் கேவலம் கற்பனையானகாலம் என்று காட்டும் சரியான பிரமாணம் இருந்தாலன்றி, இந்தக்கர்ணபரம்பரையைப்பொய்யா மற்றள்ளிவிட நமக்கு ஞாயமுமில்லை. பாத்தியமுமில்லை.

"சில வித்வான்கள் கம்பர்காலம் 11வது நூற்றூண்டென்று கூறுவதை நானறிவேன். ஆனல் அதற்கு அவர் கூறும் நியாயங்கள் போலிநியாயங்களென்றே கூறவேண்டும். அவர் கூற்றை ஒப்புக்கொள்ள நானறிந்தமட்டும்தக்க பிரமாணமொன்றும் அவரெடுத்துக்காட்டவில்லை" என்று ஒருவர் பிரசங்கித்ததாகச் சுதேசமித்திரன் பத்திரிகையிற் கூறப்பட்டிருக்கிறது.

இன்னுமிங்கொன்று அவசியம் எடுத்துக்கூற வேண்டுமென்று தோன்றுகிறது; அதாவது சிலர் "ஸ்ரீமந்நாதமுனிகள் 333 திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்தனரென்று கூறுவது அசங்கதமாயிருக்கிறது; ஏனெனில் மனிதர்கட்கெல்லாம் பொதுவாக நூறு வயதேயெனத் தெரிதலாலே" என்பர்.

இப்பொழுதும் சில பத்திரிகைகளில் இன்னின்ன தேசத்தில் இன்னின்னவூரில் இன்னின்னர் யோகாப்யாசசக்தி யொன்றுமில்லாமலே இயல்பாக நூறுக்குமேல் இருநூறுவயதுவரை யிருந்தார்கள்; இருக்கிறார்களென்று எழுதப்பட்டிருக்கிறது.

யோகாபயியாச சகதியாலே அநேக முனிவர்கள் முதலிய பெரியோர் ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஜீவித்திருந்தனரென்பது

ஆகமப்பிரமாணங்களாலும் நன்கு விளங்குகின்றது. இவைகளைப் பார்த்தும் கேட்டுமிருப்பார்களாகிலிவ்வாறு சங்கியாரென்று தோன்றுகின்றது.

அவர்கள்கொண்ட சந்தேகந்தெளியும்படி முற்காலத்திருந்த ஒரு பெரியாரது சரிதத்தைச் சுருக்கமாக வெடுத்துக்கூறி விளக்குவாம்:—

திருமூலரென்னும் பெரியார் தினம் ஒன்றுக்கு இயல்பாக வோடுகிற இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசங்களை எழுநூற்றுமுப்பதாக அடக்கியோகஞ்செய்து மூவாயிரம் வருடம் இந்நிலவுலகத்திருந்தனரென கல்வி கேள்விகளாலுயர்ந்த ஆன்றோர் கூறுப. இதுபோல ஆயிரக்கணக்கான சரிதங்களைப் பெரியோர்களிடங் கேட்டு மகிழ்வுற்றவருமநேகர்.

ஆதலாலே ஸ்ரீமந்நாதமுனிகள் யோகாப்பியாச சக்தியினாலே 333வருஷம் எழுந்தருளியிருந்தனரென்பதொருகாலும் அசங்கதமாக மாட்டாது.

அம்மகானுடைய காலநிர்ணயம் எவ்வாற்றானும் மறுக்கமுடியாத முக்கியப்பிரமாணங்களைக்கொண்டே நன்காராய்ந்து செய்யப்பட்டிருக்கிறது.

(முற்றும்.)